# காந்தள்



மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம்

2018

KP 3

# காந்தள் 2018

மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம்

# நூல் பதிப்பு விபரங்கள்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | காந்தள் |
| முத்து | : | 02 |
| இதழாசிரியர் | : | திருமதி. தனுசியா ஜீவானந்தம் |
| இணை இதழாசிரியர் | : | திருமதி. பவானி சின்னத்தம்பி |
| பதிப்பும் வெளியீடும் | : | 2018 |
| பிதிகள் | : | 300 |
| பக்கங்கள் | : | XXI + 40 |
| பதிப்புரிமை | : | மலர்க்குழு<br>மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம் |
| அட்டைப்படம் | : | கஜானந்த் அச்சகம் |
| கணினி வடிவமைப்பு | : | செல்வி. செ. ஷர்மியா |
| உதவி வடிவமைப்பு | : | திருமதி. ஜனனி சதீஸ்குமார் (ஆசிரியர்) |
| அச்சுப் பதிப்பு | : | வின் பிறிண்டஸ் |
| வெளியீடு | : | மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம் |

## மகுட வாசகம்
## (MOTTO)

எண்ணித் துணிக கருமம்

## தூரநோக்கு
## (VISION)

அறிவு, ஆளுமை, ஆன்மீக மேம்பாடுடைய சமூகம்

## பணிக்கூற்று
## (MISSION)

அரச, ஏனைய நிறுவனங்கள், சமூகத்திடமிருந்து கிடைக்கப் பெறும் வளங்களை உத்தம அளவில் பயன்படுத்தி கற்றல், கற்பித்தல், இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் ஊடாகவும் பிள்ளைகள் விரும்பும் பாடசாலையாகவும் இயங்கச்செய்து அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியம் நிறைந்த மாணவர் பரம்பரையை உருவாக்குதல்

# தமிழ்மொழி வாழ்த்து



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானமறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**மகாகவி சுப்பிரமணியப் பாரதியார்**

# பாடசாலைக் கீதம்

வாழ்க வளமுடன் என்றும்
வாழ்க வளமுடன் என்றென்றும் வாழியவே
நம் பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம்
என்றென்றும் வாழியவே

கிழக்கின் மண்ணின் மீதே
மட்டு நகர் வடக்கே
வங்கக் கடல் மீதருகினிலே
வளங்கள் பல கொண்ட பேத்தாழைக் கிராமத்திலே
அமைந்த எங்கள் வித்தியாலயம்

**( வாழ்க வளமுடன்)**

செந்நெறி நிலையினில்
செழிப்புடன் விளங்க
ஒற்றுமை நிலையை உணர்த்திடவே
விழுமியங்கள் பேணி கீர்த்திமிகு ஆசான்களை
நாடியும் பணிவுடன் கற்றிடுவோம்

**( வாழ்க வளமுடன்)**

செந்தமிழ் மொழியுடன் சிங்களம், ஆங்கிலம்
ஒருங்கிசைந்திடவே கற்றிடுவோம்
ஆக்கம், அழகியல், அறிவியல் சேர்த்து
கற்று நாமும் தேறிடுவோம்
அறிவை நாமும் பெருக்கிடுவோம்

**(வாழ்க வளமுடன்)**

**மட் / ககு / பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம்**

# ஆசிச் செய்தி

(சுவாமி தக்ஷஜானந்தர்) – இராமகிருஷ்ண மிஷன்


## RAMAKRISHNA MISSION ASHRAMA & CHILDREN HOMES

**BATTICALOA, SRI LANKA.**

T.P. ; 0094 65 2222 752, rkmbat@gmail.com


**மட்டக்களப்பு கல்குடா பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம்** வருடாந்தம் வெளியிடும் **"காந்தள்"** சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி.

**கல்வி என்பது மனிதனிடம் ஏற்'கனவே இருக்கின்ற பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது** என்கிறார் சுவாமிஜி. மேலும் நமது நாட்டின் தாழ்மைக்கு காரணமானவற்றிற்கு கல்வியே தீர்வு என்று கூறிய சுவாமிஜி, ஒருவன் சொந்தக்காலில் நிற்க உதவக்கூடியதாக அந்தக் கல்வி அளிக்கப்படவேண்டும் என்கிறார். நமது பெருமை மிக்க கலாசார பாரம்பரியத்தை மாணவர்கள் அறிந்திருக்க வேண்டுமென்றும் விரும்பினார். ஆகவே இன்றைய நவீன உலகில் எமது பாரம்பரியம், கலாசாரம், தனி மனித மற்றும் தேசிய முன்னேற்றத்திற்கு ஒருவர் பாடுபட வேண்டுமென்றால், அவர் சுவாமிஜீயைக் கற்க வேண்டும். ஏனெனில் அதுவே தற்காலத்து தர்மம்.

அன்பான மாணவ மாணவிகளே, ஆசிரியர்களே, பெற்றோர்களே இவ்வாண்டு **சுவாமி விவேகானந்தரின் சிகாகோ** சொற்பொழிவுகளின் 125ஆவது நிறைவாண்டு. நமது சமூகத்தைப் பிடித்திருக்கும் அறியாமை, ஒழுக்கமின்மை, தன்நம்பிக்கையின்மை போன்ற நோய்களெல்லாம் குணமாக சுவாமிஜீயைப் படியுங்கள், படிக்கத் தூண்டுங்கள் எனக்கூறி தெய்வத் திருமூவரின் நல்லாசிகளையும் வேண்டுகின்றோம்.

**நன்றி**

**என்றும் இறைபணியில்,**

**(சுவாமி தக்ஷஜானந்தர்)**


பொது மேலாளர்

Please mention your e-mail address for further correspondance

**This is a branch of the Ramakrishna Mission ; Colombo - 6**

All the official correspondance should be addressed to the General Manager (Swami in - Charge)

**Bank:** Bank of Ceylon, **Address:** Govington Road, Batticaloa, **Account Name :** Ashrama, **Account No. :** 2698511, **Branch ID :** 012. **Bank Swift Code :** BCEYLKLX



# ஆசிச் செய்தி

**சோதிடபிரம்மஸ்ரீ புஸ்ப பிரனவ குருக்கள்.**

பலராலும் புகழப்படுகின்ற வாழைச்சேனை என்னும் புண்ணிய பூமி இயற்கை வளமும் பக்தி மணமும் கொண்ட பேத்தாழையும் இதுவே கல்வியிலே புகழ் சேர்க்கப்பட்டு கம்பீரமாய் தழைத்தோங்கி நிற்குதடா பேத்தாழை சந்திர காந்தன் வித்தியாலயம்.

கல்வி என்பது ஏராளமான உண்மைகளை மனதில் நிற்பதல்ல. மனதைப் பூரணமாக்கி முழுவதுமாக அதை அடக்குவதே கல்வியின் நோக்கம். வாழ்க்கையை வளப்படுத்துகின்ற, மனிதனை உருவாக்குகின்ற, குணத்தை மேம்படுத்துகின்ற, கருத்துக்களை ஜீரணம் செய்யத்தக்க கல்வியே நாம் வேண்டுவது. என்பதற்கமைவாக புதுப் பொலிவுடன் காட்சி தந்து புதுமை பல படைத்த மாணவச் செல்வங்களை நல்வழிப்படுத்தி கரை சேர்க்க முன்வந்தாரே அதிபர் திரு.க. கதிர்காமநாதன். இதற்கெல்லாம் ஊன்றுகோலாக நின்ற கிழக்குமாகாண முன்னாள் முதலமைச்சர் திரு.சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்களை நான் மனமுவர்ந்து பாராட்டுகின் றேன்.

புதிதாய் மலர்ந்த காந்தள் எனும் நாமம் கொண்டு மலர்வதை நான் பேரானந்தம் அடைகின்றேன். மேலும் பல திறமைகளை வெளிப்படுத்தி இவ்விதழின் ஊடாக இன்னும் பல நன்மைகள் பெற வேண்டும் என்று எல்லாம் வல்ல அன்னையை வேண்டி எனது நல்லாசியைப் பதிக்கின்றேன்.

*"தொடர்க உமது பணி*
*புகழ் பெறட்டும் இவ்விதழ்"*

**அகில இலங்கை இந்துமத குரு, அலங்கார மாமணி,**
**சங்கித ரத்னா, வேத கான திலகம்,**
**சோதிடபிரம்மஸ்ரீ புஸ்ப பிரனவ குருக்கள்.**
**ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய பிரதம குரு**
**புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.**



# ஆசிச் செய்தி

**பங்குத் தந்தை**

வளம் சேர் கோறளைப்பற்றுப் பிரதேசத்தின் சிறப்புமிக்க இயற்கை வளம் சூழ்ந்த பேத்தாழைக் கிராமத்தில் புதிதாய்த் தோற்றம் பெற்று கல்விப் பணியை செவ்வனே நிறைவேற்றி வரும் மட்/ ககு/ பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயத்தின் "காந்தள்" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பெருமை அடைகின்றேன்.

**"ஒரு நல்ல நூல் சிறந்த நண்பனைப் போன்றது"** என்று முன்னோர் கூறியுள்ளனர். இன்றைய அதி நவீன யுகத்தில் மனிதனிடமிருக்கும் நல்ல விழுமியங்கள் மறைந்து கொண்டு செல்கின்றன. இதனால் மனிதன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் இயந்திர வாழ்கை வாழும் நிலையில் நூல்களில் பொதிந்துள்ள நல்லறிவைத்தேட நேரமில்லையென்று இருப்பவர்களேபலர். இச்சூழ்நிலையில் வெளியிடப்படும் **"காந்தள் மலர்"** சிறார்களின் எழுத்தாற்றல்களையும் வாசிப்புத் தொடர்பான ஊக்குவிப்பினையும் அதிகரிக்கும் என்பதை நினைத்து மகிழ்வடைகின்றேன்.

அத்துடன் ஒவ்வொரு ஆண்டும் **"காந்தள் மலர் மலர்ந்து என்றும் சிறப்புற்று விளங்க இறை இயேசுவின் ஆசீர் வேண்டி ஆசிக்கின்றேன்"**

**இவ்வண்ணம்**

**அருட்பணி ப. சுகந்தன் - பங்குத் தந்தை - புனித குழந்தை திரேசாள் ஆலயம் -வாழைச்சேனை**



# வாழ்த்துச்செய்தி

**திரு. சிவநேசதுரை சந்திரகாந்தன்**

முன்னாள் முதலமைச்சர், கிழக்குமாகாணம்.

வருடாந்தம் மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம் தனது காந்தள் மலரை மணம் கமழச் செய்வது சிறப்பிற்குரியது. அந்தவகையில் இவ் வருடமும் காந்தள் மலர்வது பாராட்டுக்குரியது. இச் சஞ்சிகைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மனம் மகிழ்கின்றேன். பாடசாலையில் கல்வி பயில்கின்ற சின்னஞ்சிறிய மாணவச் செல்வங்களின் சிந்தனை வெளிப்பாட்டின் படைப்புக்களையும் மாணவர்களிடத்திலே இருக்கின்ற ஆசுக்களையெல்லாம் அகற்றவல்ல புனித மாந்தர்கள் எம் ஆசிரியப் பெருந்தகைகளினதும் உயரிய சிந்தனையாற்றல்களின் வெளிப்பாடுகளையும் தாங்கியதாக மணம் வீசும் காந்தளின் வாசம் தொடரட்டும்.


ஒரு சமுகம் நிலைபேறடைய பல வழிகள் துணை நின்றாலும் கூட, கல்வியே அச் சமூகத்தின் நிலைபேற்றிற்கான திறவுகோலகும் என்பது கண்கூடு. இக்கல்வியினாலேயே எம் சமூகம் வளம் பெறலாம் என்ற உயரிய சிந்தனையின் வெளிப்பாடுதான் இவ் வித்தியாலயமும் கூட. நான் போராட்டத்திலிருந்த காலம் தொட்டே இச் சிந்தனை எனது உள்ளத்தில் உதித்தது. அச் சிந்தனைக்கு உரம் சேர்க்கும் செயற்பாடு கிழக்கின் முதல் முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்து தொடங்கியது. இச் செயற்பாடுகளின் பிரதிபலிப்பாகவே மாவட்டத்தின் நாலாதிசையும் எனது கல்வி அபிவிருத்திப் பணி தொடர்ந்தது. உலகமயமாக்கலின் ஊடாக நவீன தொழிநுட்ப வளர்ச்சி கொண்ட யுகமாக இவ் உலகம் மாறிக்கொண்டு வருகின்றது. அதற்கேற்றாற் போல் எமது மாணவ சமூகமும் மாறவேண்டும் என்பது எனது அவா. இவ் ஆசை நிறைவேற நான் அயராது உழைப்பேன் என்பது திண்ணம்.

மாணவர்கள் வெறுமனே கற்றல் செயற்பாடுகளுடன் மாத்திரம் நின்றுவிடாமல் தமது உள்ளார்ந்த உணர்வுகளின் வெளிப்பாடுகளை வெளிக்கொணரும் முகமாக இவ்வாறான புறக்கிருத்திய மேம்பாட்டுச் செயற்பாடுகள் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படுவது பாராட்டுக்குரியது. இவ்வாறான புறக்கிருத்தியச் செயற்பாடுகளின் வாயிலாக மாணவர்களின் ஆளுமைத்திறன்கள் விருத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறாக சிந்தனையும் செயலும் ஒருங்கிணைந்து செயற்படும் போது வெற்றிக்கான இலக்கு இலகுவாக எட்டப்படும் என்பது உறுதி. நான் தற்போது இச் சஞ்சிகையின் படைப்பாளிகளையும் அதன் ஏற்பாட்டாளர்களையும் நேரிலே வந்து வாழ்த்தாவிட்டாலும். எனது உணர்வலைகள் என்றும் உங்களை வாழ்த்தும். வெகுவிரைவில் இவ் ஆக்கங்களின் சொந்தக் காரர்களுக்கு பாராட்டுத் தெரிவிக்க நான் வருவேன்.

உண்மையிலே எனது சொந்த ஊரான பேத்தாழையிலே எனது பெயரிலே இப்பாடசாலை அமையப்பெற்றிருப்பதானது, மேலும் ஒரு படி மகிழச்சியின் எல்லைக்கு என்னை இட்டுச் செல்கிறது என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் இச் சஞ்சிகைக்கு ஆக்கங்களை வழங்கிய எனது அன்புக் குழந்தைகளுக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் இவற்றையெல்லாம் முகாமை செய்கின்ற வித்தியாலயத்தின் முதல்வர் **திரு. க. கதிர்காமநாதன்** அவர்களுக்கும் இச் சஞ்சிகை ஏற்பாட்டாளர்களுக்கும். மேலும் இச்சஞ்சிகை வெளியீட்டில் அதிதிகளாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தங்கள் அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். என் எண்ணங்களைச் சிறைப்பிடிக்க நினைத்தவர்கள் எட்டி நின்று என்னை ஏங்கிப் பார்க்கும் காலம் வெகுவிரைவில்..........

*நன்றி*

**திரு.சிவநேசதுரை சந்திரகாந்தன்,**
முன்னாள் முதலமைச்சர்,
கிழக்குமாகாணம்.



# வாழ்த்துச்செய்தி

**கல்குடாவலயக்கல்விப் பணிப்பாளர்.**

எமது கல்குடா கல்வி வலயத்தின் 83 பாடசாலைகளில் பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பாடசாலையாகும். 360 மாணவர்களையும் 13 ஆசிரியர்களையும் கொண்ட எமது வலயத்தின் சிறந்த ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்றாக இது தொடர்ந்தும் விளங்கிவருகிறது.

நாட்டின் பல பாகங்களிலிருந்து வருகை தரும் பாடசாலை சமூகத்தி-னருக்கு தமது அனுபவப் பகிர்வு மூலமாகவும் சிறந்த செயற்பாடுகளை நிதர்சனமாக காண்பிப்பதன் மூலமாகவும் கல்குடா வலயத்துக்கு பெருமை சேர்க்கும் ஒரு சிறந்த பிள்ளை நேயப் பாடசாலையாக இவ்வித்தியாலயம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதிபர் **திரு. க. கதிர்காமநாதன்** அவர்களது வினைத்திறனான தலைமைத்துவமும் திறமையான ஆசிரியைகளின் நேர்முகமான சமூகப்பங்களிப்பும் முன்னாள் கிழக்குமாகாண முதலமைச்சர் **கௌரவ. சிவநேசதுரை சந்திரகாந்தன்** அவர்களது தொடர் ஊக்குவிப்புகளும் காரணமாகும்.

இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அபிவிருத்திக் குழுவினர் இணைந்து இரண்டாவது முறையாக வெளியிடும் **"காந்தள்"** சஞ்சிகை இனிதே வெளிவர வாழ்த்துகிறேன். பாடசாலைகளால் வெளியிடப்படும் இத்தகைய சஞ்சிகைகள் எம்முடைய வரலாற்றின் ஆவணங்களாக விளங்குகின்றன. இவ்வாறான சஞ்சிகைகள் எமது எதிர்கால சந்ததியினருக்கு வழி காட்டும் தடங்களாக இருக்கும்.

**"காந்தள்"** இதழின் மலர்வானது தொடரவேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன். இச்சஞ்சிகை வெளியீடு என்றும் போல் விமர்சையாகவும், வெற்றிகரமாகவும் நிகழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். ஏற்பாட்டுக் குழுவினருக்கு எனது வாழ்த்துக்கள். அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் என யாவருக்கும் வாழ்த்-துக்கள்.

*அன்புடன்*

**தி.ரவி**

**கல்குடாவலயக்கல்விப் பணிப்பாளர்.**



# வாழ்த்துச் செய்தி

**பிரதிக் கல்விப் பணிப்பாளர் [நிருவாகம்],**

**த**மிழர் பண்பாட்டையும், கலைகலாசார அம்சங்களையும் தன்னகத்தே உள்ளடக்கிக் காணப்படும் பேத்தாழைக் கிராமத்தில் அழியாச் செல்வமாம் கல்வியை சீராக வழங்கிக் கொண்டிருக்கும் பாடசாலையான மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயத்தின் **"காந்தள்"** சஞ்சிகை வெளியீட்டிற்காக வாழ்த்துச் செய்தி வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு உவகையடைகின்றேன்.

கல்குடா கல்வி வலயத்தில், வினைத்திறனுடைய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனூடாக மாணவர்களை எதிர்காலத்தின் வலுவான சமூகத்திற்குத் தயார்படுத்திக் கொண்டிருக்கும் பெயர் குறிப்பிட்டுக் கூறக்கூடிய பாடசாலைகளில்பேத்தாழைசந்திரகாந்தன் வித்தியாலயமும் பிரதான இடத்தைப் பெறுகின்றது. சிறந்த தலைமைத்துவத்தை வெளிக்காட்டும் அதிபர், மாணவர்களது கல்வி வளர்ச்சிக்காக உழைக்கும் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் செயற்பாடுகளில் ஆர்வமுடன் ஈடுபடும் சமூகத்தினர் என இப்பாடசாலைக்கு வளங்கள் அமையப் பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

இந்த வகையில் பாடசாலை ஆசிரியர்களதும், சின்னஞ்சிறு மாணவமணிகளதும் பல்வேறு உள்ளார்ந்த ஆற்றல்களை வெவ்வேறு வடிவங்களில் தாங்கி **"காந்தள்"** மலர் வெளிவருவது பெருமைக்குரிய விடயமாகும். ஆரம்பப் பாடசாலையாக இருந்தும்கூட இவ்வாறானபெறுமதியுள்ளசெயற்பாடுகளில் ஆர்வமுடன்ஈடுபட்ட பாடசாலைக்குழாத்தினர் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழத்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

*தொடர்ந்தும் "காந்தள்" எனும் மலர் மலர்ந்து மணம் வீச வாழ்த்துக்கள்.*

**திருமதி. சிவசங்கரி கங்கேஸ்வரன்,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் [நிருவாகம்],**
**கல்குடா கல்வி வலயம்.**



# வாழ்த்துச் செய்தி

## கோட்டக்கல்விப் பணிப்பாளர்

வருடந்தோறும் பரிசளிப்பு விழாவினை தவறாது நடாத்தி வரும் மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம் இவ்வருடமும் பரிசளிப்பு நிகழ்வுடன் இரண்டாவது முறையாக தனது **"காந்தள்"** சஞ்சிகையையும் வெளியிடுவதற்கு முன்வந்துள்ளமை பாராட்டுதற்குரியது.

இன்று சிறிய பாடசாலைகள் மிகப் பெரிய பணியாகிய நூல் வெளியீடு செய்தல் என்பது பொருளாதார அடிப்படையில் பாரிய சுமை நிறைந்த காரியமாகும். இருப்பினும் மாணவர்களது எழுத்தாற்றல் மொழித்தேர்ச்சி, தேடி அறிதல் திறன், சிந்தனைத்திறன் விருத்தி வாசிப்புத்திறன் விருத்தி, படைப்பாற்றல் மனப்பாங்கு விருத்தி ஆகிய திறன்களை மேம்படுத்தும் நோக்குடன் காந்தள் பாடசாலைச் சஞ்சிகை வெளியிடப்படுகின்றது.


**"சமூகக் பங்களிப்பின்றி எந்தவொரு பாடசாலையினதும் பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான நடவடிக்கைகளில் முழுமையான வெற்றியைக் காணமுடியாதென்பது"** இப்பாடசாலையின் ஸ்தாபகத் தலைவராகிய முன்னாள் கிழக்கின் முதலமைச்சர் **கௌரவ திரு. சிவநேசதுரை சந்திரகாந்தன்** அவர்களின் தூரநோக்காக அமைந்திருந்ததை அவர் 24.01.2011ஆம் ஆண்டில் இப்பாடசாலையை திறந்து வைத்து பெற்றோர்களுக்கு ஆற்றிய உரையினை இச்சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்ட விரும்புகிறேன். ஆகவே பாடசாலைச் சமூகம் பாடசாலையுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

**"காந்தள்"** சஞ்சிகை வெளியீட்டுக்குத் தலைமை தாங்கி சகல வழிகளிலும் உறுதுணை புரிந்த இவ்வித்தியாலய அதிபர் **திரு.க.கதிர்காமநாதன்** அவர்களுக்கும் இச்சிறப்பு மலருக்கான சிந்தனையைத் தூண்டியவர்களுக்கும் ஆக்கங்களை வழங்கிய மாணவர்கள் ஆசிரியர்களுக்கும் இதனை நெறிப்படுத்திய மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், மற்றும் பெற்றோர்கள் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.என்.குணலிங்கம்**

**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**

**கோறளைப்பற்று, வாழைச்சேனை.**



# வாழ்த்துச் செய்தி

*அதிபரின் உள்ளத்திலிருந்து...*

எமது வித்தியாலயமானது 2011.01.24 ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்டு எட்டு வருடங்கள் நிறைவு பெறும் இக்காலப் பகுதியில் வெண்கல விழாவினைக் கொண்டாடும் இந் நிலையில் **"காந்தள்"** எனும் நாமம் தாங்கி இரண்டாவது மலராக எழில்மிகு சுகந்தமாக வெளிவருவது இவ் வித்தியாலயத்தின் பெருமைக்கும், சிறப்புக்கும் எடுத்துக்காட்டாகும்.

தற்காலக் கல்விச் சமுகத்தின் இலக்கிய ஆக்கத்திறன்களை வெளிக்கொணரும் வகையில் மாணவர் சமுகத்தின் இலட்சியக் கனவுகளுடன் பண்புள்ளவர்களாகவும், மனித நேயமிக்கவர்களாகவும், திறன் படைத்தவர்களாகவும், பெற்றோர்களின் கனவுகளை நனவாக மாற்றியமைக்கும் செயற்றிறன் மிக்க சிறந்த களமாக சஞ்சிகைகள் விளங்கு கின்றன. இந் நிலையில் எமது சின்னஞ் சிறு பாலகர்களினதும், ஆசிரியர்களினதும் பங்களிப்புடன் இச் சஞ்சிகை வெளிவருவது மாணவர்களின் சிறு பராய தேடல்களுக்கு துணை புரியும் என நம்புகின்றேன்.

சம காலத்தில் பல்வேறுபட்ட ஆக்கத்திறன் விருத்தியிலும் கல்வி வளர்ச்சிப் போக்கிலும் கல்குடா கல்வி வலயத்தின், கோறளைப்பற்றுப் பிரதேச பாடசாலைகளில் பெருமை மிக்க நிலையில் குறுகிய கால வளர்ச்சிப் போக்கில் வெற்றி நடை போட்டுவரும் இப் பாடசாலை ஓர் முன்மாதிரியான பாடசாலையாகவும், எல்லோரும் விரும்பும் பாடசாலையாகவும் திகழ்வதும் எமக்குக்கிடைத்த வரப்பிரசாதமாகும். இதற்கு துணைபுரிந்த கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் **கௌரவ திரு.சிவநேசதுரை சந்திரகாந்தன்** அவர்களுக்கும், கல்குடா வலய கல்விப்பணிப்பாளர் **திரு. தினகரன் ரவி** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந் நிலையில் இச்சஞ்சிகை இவ்வாண்டும் வெளிவருவதையிட்டு மகிழ்வுடனான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இச் சஞ்சிகை மலர்வதற்கு ஒத்துழைப்பு நல்கிய நல்லுள்ளங்களுக்கும் மன மகிழ்வான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று"**

**திரு.கயிலாயபிள்ளை கதிர்காமநாதன்**
**வித்தியாலய அதிபர்**



# வாழ்த்துச் செய்தி

*உப அதிபரின் உள்ளத்திலிருந்து...*

மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால் அவன் மனிதப் பண்புகளை கொண்டிருக்க வேண்டும். அந்த மனிதப் பண்புகளை வளர்க்கும் இடம்தான் பாடசாலை. பாடசாலை என்பது வெறுமனே கல்வியறிவை புகட்டுமிடமாக மட்டுமன்றி மாணவர்களுடைய ஆற்றல்களையும் திறன்களையும் வெளிக் கொணரும் ஒரு களமாகவும் அமைகின்றது. அந்த வகையில் இக்காந்தள் சஞ்சிகையானது இரண்டாவது முறையாக வெளியிடப்படுவதையிட்டு நான் பெருமிதமடைகின்றேன்.

இச் சஞ்சிகை மாணவர்களது எழுத்து. வாசிப்புத் திறன்கள் வளரவும், புதிய சிந்தனை ஆற்றல்கள் உருவாகுவதற்கும் வழிசமைத்துக் கொடுக்கின்றது. ஆண்டு தோறும் இச் சஞ்சிகையானது வளர்ந்து பயன் தந்து பெருமை சேர்க்க வேண்டும் என்று மனதார வாழ்த்துவதோடு இக் காந்தள் சஞ்சிகையானது வெளிவர நல் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய வித்தியாலய அதிபர் அவர்கட்கும் திறம்பட உழைத்த மலர்க்குழுவினர்கட்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.மரியஸ்ரெலா தயாளகுணதாஸ்**

**உப அதிபர்**



# வாழ்த்துச் செய்தி

*பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளரின் உள்ளத்திலிருந்து...*

மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயத்தின் இரண்டாவது வெளியீடாக மலரும் **"காந்தள்"** மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதற்கும் இம் மலர் வெளியிடும் காலத்தில் பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாராக நான் இருப்பதையிட்டும் பெருமையடைகிறேன்.

இவ்வித்தியாலயமானது குறைந்த எட்டு வருட காலத்தில் துரிதமான கல்வி வளர்ச்சியில் சாதனை படைத்து வருவதும் கலை கலாசாரம் மற்றும் புறக்கிருத்திய செயற்பாடுகளில் இம்மாணவரது சாதனைகளையிட்டும் பெருமகிழ்வு அடைய வேண்டிய தொன்றாகும். வருடந்தோறும் பரிசளிப்பு விழாக்களும் மாணவர் பாராட்டுக்களும் நடந்தேறி வருகின்றது. இவ்வித்தியாலயத்தின்ஸ்தாபகத்தலைவராகியமுன்னாள்கிழக்கின்முதலமைச்சர் **கௌரவ திரு.சிவநேசதுரை சந்திரகாந்தன்** அவர்களது அயராத முயற்சிக்கு கிடைத்த பாரிய வெற்றிப்படியாக இவ்வித்தியாலயம் சிறப்புற்று விளங்குகின்றது. மாணவர்களின் ஒழுக்கமான கட்டுக்கோப்பான கல்வி ஒழுங்கமைப்பு, அதிபர் அவர்களின் அயராத முயற்சியும் தன்னம்பிக்கையும் பாடசாலை வளர்ச்சிக்கு உதவுவதுடன் ஆசிரியர்களின் அயராத சீர்படுத்தப்பட்ட கல்வி ஊட்டல்களும் பாடசாலையை ஒழுங்குறச் செய்துள்ளது. இந்த வகையில் காந்தள் சஞ்சிகை வெளிவருவதற்கு வாழ்த்துக்களைக் கூறியும் மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும், இம்முயற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் தொடர்ந்தும் இச்சஞ்சிகை வெளிவருவதற்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.த.நித்தியானந்தன்**
**பாடசாலை அபிவிருத்திக் குழுச் செயலாளர்**



# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து..

பாடசாலை வசம் ஒப்படைக்கப்பட்ட இளம் மாணவச் சிற்பிகளின் ஆளுமை திறன் விருத்திகளை தற்கால நவீன கல்விப் பொருத்தப்பாட்டிற்கு இட்டுச் செல்லும் மிகப் பெரும் களமாக பாடசாலைகள் விளங்குகின்றன. எந்தவொரு விடயத்தினையும் எடுத்தாலும் அதில் அறிவைத் தேடும் வ கயில் வாசிப்பு முன் நிற்கின்றது. இவ்வாசிப்பின் மூலமாகவே உலகிலுள்ள அனைத்து விடயங்களை ஒருங்கு சேர்த்துக் கொள்வதாக அமைகின்றது.

இந்த வகையில் கடந்த வருடம் எமது வித்தியாலயத்தின் **'காந்தள்'** மலரானது புதிதாய் மலர்ந்தமை யாவரும் அறிந்த விடயமே. தற்போது இவ் வருடமும் இரண்டாவது மலராக காந்தள் மலர்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். சிறார்களின் மழலை மொழியோடு அதிபர், ஆசான்களின் வழிகாட்டலில் பல்வேறு ஆக்கங்கள் தாங்கி புதுப் பொலிவுடன் தளர்நடை போட்டு **"காந்தள்"** தனிச்சிறப்புடையதாக விளங்குகின்றது. அவ்வாறே ஒவ்வொரு மலரும் புதிதாய் மலரும் போது

**மழை சொன்னது:**

*"கருணை உள்ளவனே*
*உயிர்களுக்குத்*
*தலைமை தாங்குகிறான்."*

**மலை சொன்னது :**

*"பணிந்து வாழ்ந்தால்*
*உயர்ந்து போவாய்*
*நிமிர்ந்து திரிந்தால்*
*இறங்கிப் போவாய்"*

**சூரியன் சொன்னது:**

*"மறைந்தும் மறையாதிருக்க*
*உன் சுவடுகளை விட்டுச் செல்"*

எனும் கருத்திற்கு அமைவாக மலர்ந்துள்ள இம் மலரானது சந்திரகாந்தன் வித்தியாலயத்தில் ஞாபகச் சுவடுகளாக என்றென்றும் தடம் பதிக்கும் என்ற தளராத நம்பிக்கையுடன் இதில் விரிந்துள்ள ஒவ்வொரு இதழும் யாவர்க்கும் பயனுள்ளதாய் அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இவ் வகையில் இம்மலருக்காக ஒத்துழைத்த அன்புள்ளங்கள் யாவரையும் பாராட்டி நன்றி கூறி மகிழ்கின்றேன்.

**திருமதி தனுசியா ஜீவானந்தம்.**
**ஆசிரியை**

# மலர்க்குழு

## காப்பாளர் ஆலோசகர்

திரு.க.கதிர்காமநாதன் – அதிபர்

## இதழாசிரியர்

திருமதி.தனுசியா ஜீவானந்தம்

## இணை இதழாசிரியர்

திருமதி.பவானி சின்னத்தம்பி

## செயலாளர்

திருமதி.மரியஸ்ரெலா தயாளகுணதாஸ் - உப அதிபர்

## இணைச் செயலாளர்

திருமதி.ரஜினி சுபேந்திரகுமார்

## பொருளாளர்

திருமதி.லோகினி ஜெயாபரன்

## வெளியீட்டுக்குழு

திருமதி.ஜனனி சதீஸ்குமார்

திருமதி.ஜெமினேஸ்வரி அருளப்பு

செல்வி.செ.வாணிஸ்ரீ

திருமதி. திராவிடமலர் பாஸ்கரன்

திருமதி.சுகுணா சந்திரகுமார்

# OUR STAFF

**Mr. K. Kathirgamanathan**
SLPS III, Trained in Tamil, B.A, PGDE,PGDEM

**Mrs. M.Thayalagunathas**
Trained in Primary

**Mrs.T.Jeevanantham**
Trained in Primary, B.A

**Mrs.J.Arulappu**
Trained in Primary

**Miss.S.Vanisri**
Trained in Primary

**Mrs.J.Satheeskumar**
Trained in English, **B.A**

**Mrs.L.Jeyaparan**
Trained in Primary

**Mrs.B.Sinnathamby**
Trained in Primary

**Mrs.R.Supendrakumar**
Diploma in Teach in Primary, **B.A**

**Mrs.S.Chandrakumar**
Trained in Primary

**Mrs.T.Paskaran**
Trained in Primary

**Mrs.N.Rajakumar**
Trained in Primary

**Mrs.V.Mohanathas**
Trained in Primary

**Mrs.H.Vimaladevi**
HNDE

# பாடசாலைச் சின்னம்

மட்/கது/பேத்தாழை சந்திரகாந்தன்

வித்தியாலயம்

எண்ணித் துணிக கருமம்

BT/KK/PETHALAI SHANDRAKANTHAN
VIDYALAYAM, VALAICHCHENAI


திரு.க.கதிர்காமநாதன் - அதிபர்



శ్రీ ఎ. శ్రీనివాసరెడ్డి – చైర్మన్

# பாடசாலையின் முன்னேற்றம்

இசுறு பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான ஊட்டப் பாடசாலையாக கிழக்கு மாகாணத்திலே முதன்முறையாக 2011.01.24 ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்ட பெருமை இப்பாடசாலையைச் சாரும். இந்த வகையில் இப்பாடசாலையின் வளர்ச்சிப் போக்கில் முன்னாள் கிழக்கின் முதல்வர் **கௌரவ. திரு.சிவநேசதுரை சந்திரகாந்தன்** அவர்களின் தொடர் பங்களிப்பு இன்று வரை கிடைத்து வருகின்றது. அத்துடன் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் **திரு.தினகரன் ரவி** அவர்களும், வலயப் பாடசாலை மேம்பாட்டுக் குழுவுக்கு பொறுப்பாகயிருக்கின்ற **திருமதி. சிவசங்கரி கங்கேஸ்வரன்** அவர்களினதும், கோட்டக் கல்விப் பணிப்பாளர் **திரு.என்.குணலிங்கம்** அவர்களினதும், ஏனைய கல்விப் பணிப்பாளர்களின் வழிகாட்டல்கள், மற்றும் ஆலோசனைகள் இப் பாடசாலை முன்னோடிப் பாடசாலையாக அமைவதற்கு பெரும் பங்களிப்பை செலுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

2018ஆம் ஆண்டில் மொத்த மாணவர் தொகையாக 362 மாணவர்கள் காணப்பட்டனர். தற்போது 13 ஆசிரியர்கள் கடமையாற்றுவதுடன் இவ்வருடம் **திருமதி.கலைவாணி வசந்தகுமார்** ஆசிரியை இடமாற்றம் பெற்றுசென்றதன் பின்னர் **திருமதி.நேசமலர்ராஜகுமார். திருமதி.விஜயலெட்சுமி மோகனதாஸ், திருமதி.விமலாதேவி ஹரிப்பிரதாப்** ஆகிய ஆசிரியர்கள் இணைந்து கொண்டனர். அத்துடன் 50 X 25 அடி கொண்ட இருமாடிக் கட்டிடம் TSEP நிதியின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலை திருத்த வேலைகளும் புதிய கட்டுமாண வேலைகளும் ஒழுங்கமைக்கப்பட்டு வருவதுடன், பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

வருடந்தோறும் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் புறக்கிருத்தியச் செயற்பாடுகளும் குறித்த காலங்களில் இடம்பெற்று வருகின்றது. இவ்வருடம் 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளகளுக்கு மேல் சித்தி வீதமாக 81.5 ஆக அதிகரித்ததுடன் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் இரண்டு மாணவர்கள் சித்தியடைந்தனர். அந்தவகையில் செல்வி. **உ.அதுஸ்ரதி– 174, செல்வி. நி.ஹேமிஷானியா– 172** ஆகிய இரு மாணவர்கள் பாராட்டப்பட்டனர். இவ்வருடத்திற்கான புலமைப்பரிசில் மாணவர்களை **திருமதி.பவானி சின்னத்தம்பி, திருமதி.றஜினி சுபேந்திரகுமார்** ஆகிய ஆசிரியர்கள் வழிப்படுத்தியிருந்தனர்.

2017ம் ஆண்டு பாடசாலையில் காந்தள் சஞ்சிகை முதன்முதலாக வெளியிடப்பட்டது. இதனை வலயக் கல்விப் பணிப்பாளர் **திரு.தினகரன் ரவி** அவர்கள் வெளியிட்டிருந்தார். அத்துடன் இச்சஞ்சிகை ஒவ்வொரு வருடமும் வெளியிடப்பட வேண்டும் என்று கூறியிருந்ததற்கமைய 2018லும் **காந்தள்** சஞ்சிகை வெளியிடப்படுவதும், பரிசளிப்பு விழா நடைபெறுவதும் சிறப்புக்குரியது.

இதேவேளை கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கிழக்கு மாகாண ஆரம்பப்பிரிவு பாடசாலைகளுக்கான சிறுவர் விளையாட்டுப் போட்டியில் கலந்து பாராட்டுகளைப் பெற்றதுடன், இவ்விழாவில் எமது மாணவர்களின் மேலைத்தேய இசைக்குழு பங்குபற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலையைப் பொறுத்தவகையில் ஒவ்வொரு மாணவர்களும் அன்போடு அரவணைக்கப்பட்டு கல்வி புகட்டப்படுவதுடன் சிறந்த ஒழுக்க விழுமியப் பண்புகளை வளர்ப்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக கவனம் செலுத்தப்படுகின்றனர். கல்வி கற்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் பாடசாலையில் பற்றுணர்வுடன் தமது பிள்ளைகளின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பது அபரிமிதமாக காணப்படுகின்றது. இந்த வகையில் வரும் ஆண்டில் புதிய நடைமுறையாக முதலாம் தர மாணவர்களுக்கு பாடசாலை சீருடைக்கு மேலாக நிற மேலங்கி ஒன்றை அணிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒன்றுகூடல் மண்டபம், வசதிகளுடன் கூடிய மலசலகூடம், நீர்த்தாங்கி, பிரதான வாயிலில் பெயர்ப் பலகை என்பன அமைப்பது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பெற்றோர்கள், சமூகம் சார் நலன் விரும்பிகள் கல்வியில் ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் சிறந்த முன்மாதிரிப் பாடசாலையாக நிலைநிறுத்தலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.


**மலர்க்குழு.**

# மட் / ககு / பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம்

# பொருளடக்கம்


★ ஆசிரியர்.......... 01
★ அன்னையே .......... 01
★ தமிழின் பெருமை .......... 02
★ சிறப்புற வாழ்வோம் .......... 03
★ மேன்மை தரும் ஒழுக்கம் .......... 03
★ பொன் மொழிகள் .......... 04
★ புதிர்கள் .......... 04
★ நேரத்தின் அருமை .......... 05
★ தாய்மொழியே எம் மொழி .......... 06
★ நாளை உலகம் நமதே .......... 06
★ பொது அறிவு .......... 06
★ பசுமை உலகு .......... 07
★ ஒரு பிள்ளையின் கற்றல் வீதத்தை அதிகரித்தல்.......... 08
★ அறிவிற்கு விருந்து .......... 08
★ சிறுவர்களைப் பாதுகாப்போம் .......... 09
★ வெற்றிலை தரும் மருத்துவம் .......... 10
★ சிந்தனைத்துளிகள் .......... 11
★ அப்பா .......... 11
★ அம்மா .......... 12
★ மருத்துவக் குறிப்புகள் .......... 12
★ விவேகானந்தரின் பொன்மொழிகள் .......... 13
★ ஏக்கம் .......... 13
★ கணினி பற்றி அறிவோம் .......... 14
★ அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் .......... 15
★ சித்திரைப்புத்தாண்டு .......... 16
★ உணவுப் பழக்கம் பழமொழி வழியில் .......... 17
★ கவனத்தில் கொள்வீரே .......... 17
★ புதிர்களும் விடைகளும் .......... 18
★ அழகு .......... 19
★ எனது ஆசிரியர் .......... 19
★ பனை மரம் பேசுகின்றேன் .......... 20
★ எங்கள் பாடசாலை .......... 21
★ கடிகாரம் .......... 21
★ இலங்கையிலுள்ள மூலிகைத் தோட்டங்கள் .......... 21
★ முன்பள்ளிக்கல்வியும் பெற்றோரின் புரிதலும் .......... 22
★ இலங்கை பற்றி நான் அறிந்தவை .......... 23
★ நுட்பவியல் கலைச்சொற்கள் .......... 24
★ இன்றைய சிறுவர்களை நாளைய உலகிற்கு .......... 25
★ எனது எதிர்கால இலட்சியம் .......... 26
★ தாய் அன்பைத் தேடி .......... 27
★ பள்ளி .......... 27
★ இனிய நினைவுகள் .......... 28
★ ஔடத பானத்தின் மருத்துவம் .......... 28
★ கழுதையும் விவசாயியும் .......... 29
★ ஒன்றிற்கொன்று எதிரான உணவுகள் .......... 29
★ சிறுநீரக கற்கள் அகற்றும் மூலிகை .......... 30
★ உலகின் சிறந்த கண்டுபிடிப்புகள் .......... 30
★ நகைச்சுவைத் துணுக்குகள் .......... 31
★ பிராணிகள் பற்றி விடுகதைகள் .......... 31
★ அன்புள்ள அம்மாவிற்கு .......... 32
★ விபுலானந்தரைப் போற்றிடுவோம் .......... 33
★ பள்ளிக் கூடம் போகலாமா? .......... 33
★ சிறுவர் விளையாட்டுக்கள் .......... 34
★ ஆசிரியர் தொழில் வாண்மைத்துவம் .......... 35
★ வாசிப்பு ஒரு இன்பகரமானது .......... 38
★ அதிகாலைப் பொழுது .......... 39
★ நாய்க் குட்டி .......... 39
★ நன்றி நவில்கின்றோம் .......... 40

# ஆசிரியர்



உலகிலுள்ள புனிதமான
இரு இடங்களில் - ஒன்று
தாயின் கருவறை மற்றையது
ஆசிரியரின் வகுப்பறை

தாயின் கருவறையிலே உயிரைப்
பெறுகிறோம் - ஆனால்
ஆசிரியர் வகுப்பறையில்
அறிவைப் பெறுகிறோம்.

எங்களை கல்லும் உடையாமல்
சிலையும் சிதறாமல் செதுக்கி
கொண்டிருக்கும் சிறந்த சிற்பி
எம் ஆசிரியராகிய நீங்களே.

எங்களின் ஆறாம் அறிவிற்கு
கல்வி புகட்டிஇ கூர்மை சேர்த்து
நாளைய சமுதாயத்தில் - எம்மை
நல்லெண்ணம் உள்ளவர்களாக
மிளிர வைக்க உழைக்கும் உங்களுக்கு
உலகே வாழ்த்தட்டும்.

**பா.ரேஸ்னா**
**தரம்– 5B**



# அன்னையே

பத்துமாதம் என்னைச் சுமந்து.
பக்குவமாய் பெற்றெடுத்து.
பாசத்தால் எனை வளர்த்து
பரிவாக எனை அனைத்து

பாலமுதம் எனக் கூட்டி
தோளினிலே எனைத் தூக்கி
தொட்டினிலே எனை ஆட்டி
பாடலோடு எனை வளர்த்து

பாட்டினிலே உறங்க வைத்து
பள்ளிக்கு அழைத்துச் சென்று
பாடங்களை கற்க வைத்து
உன் வியர்வையிலே எனை உயர்த்தி

உறங்காமல் எனைக் காத்து
பட்டங்கள் பல பெற்று
பரிசுகள் பல பெற்றேன் அன்னையே

உன் அன்பான அன்பையும்
பரிவான பாசத்தையும் நான்
அனுதினமும் ஆராதிக்கின்றேன்.
அன்னையே.

**க.ஜனாக்ஷனன்**
**தரம்– 5B**

# தமிழின் பெருமை

தன்னிகரில்லாத் தமிழ் பற்றியும், தமிழின் பெருமை பற்றியும் நாம் அறியப் போகின்றோம்.
"தமிழுக்கும் அமுதென்று பெயர் - அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாடி புல்லரிக்க வைக்கின்றார் பாவேந்தர் பாரதிதாசன்.
"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று கூறுகின்றார் மகாகவி பாரதியார்.

உலகில் பழைமையான மொழிகள் பலவற்றில் இன்று வரையில் அழியாமல் வழக்கில் இருப்பது தமிழ் மட்டுமே. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடி என்று பெருமையுடன் புகழ் பாடுகின்றார் ஒரு கவிஞர். பதினெண் கீழ் கணக்கு நூலகளான எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும், ஐம்பெரும் காப்பியங்களும், திருக்குறளும் நாலடியாரும் இன்று வரையில் அழியாது இருக்கின்றன.

பண்பாடு, கலை, இலக்கிய வளம் என்று தனித்து விளங்குவது தமிழ். தமிழ் மொழி மிகவும் இனிமையானது. அது சமஸ்கிருதத்தை விடப் பெருமையானது என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.
தமிழன் காலடி படாத இடமில்லை. இமயத்தில் புலிக் கொடியினை நாட்டியவன், கடாரம் வென்றவன், உலகின் மிகப் பெரும் கோயிலான ஆங்கோர்வாட் ஆலயத்தைக் கட்டியவர் எல்லாம் தமிழனே.

தமிழின் பெருமையினை உலகமெல்லாம் பரப்பியவன், கலை இலக்கிய பண்பாடுகளை கட்டிய கோயில்கள் இலக்கியங்களில் வெளிப்படுத்தியவன் தமிழன்.

எத்தனை அழகான தமிழ் பாடல்கள் அகம், புறம், ஐம்பெருங்காப்பியங்கள், பரணி, சைவ, வைணவ நூல்கள், பக்தி இலக்கியங்கள் அள்ள அள்ள குறையாத அமுத நீரூற்றாக இருக்கின்றது. தமிழில் உள்ள ஒவ்வொரு கவிதைகளும் நம்மை மெய்மறக்கச் செய்து விடுகின்றன.

தமிழன் வேட்டையாடுவதில் சிறந்தவன். மலையில் வேட்டையாடினான், குறிஞ்சி நிலத்திலிருந்து மருத நிலத்துக்கு வந்தான். முல்லை என்பது காடு, குறிஞ்சி என்பது மலை மருதம் என்பது வயல்.

திருவள்ளுவர் விவசாயத்தைப் பற்றி உணவு என்ற அதிகாரத்தில் எழுதியிருக்கின்றார். விவசாயி வயல் வெளியில் என்ன செய்கின்றான். நெல் நாற்று நட்டால் இரண்டு நெற்பயிர்களுக்கு இடையே நண்டு ஊர்ந்து செல்ல வேண்டும். கரும்பு நட்டால் இரண்டு கரும்புகளுக்கிடையே நரி ஓட வேண்டும். வாழை மரங்கள் நட்டால் இரண்டு வாழை மரங்களுக்கிடையே மாட்டு வண்டில் ஓட வேண்டும். தென்னை மரங்கள் நட்டால் இரண்டு தென்னை மரங்களுக்கிடையில் தேர் ஓட வேண்டும்.

"நண்டு ஊர நெல்லு - நரி ஓடக் கரும்பு
வண்டி ஓட வாழை - தேர் ஓடத் தென்னை"

என்று உலகிற்கு சொல்லிக் கொடுத்தவன் தமிழன். சூரியனுக்கு நன்றி கூறியவன் தமிழன். மாடுகளுக்கு விழா எடுத்தவன் தமிழன். மண்ணிற்கு உயிர் கொடுத்தவன் தமிழன். தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று கண்டு பிடிக்கப்பட்டதன் பின்னர் தான் மண்ணுக்கு உயிர் உண்டு என்று கண்டு பிடித்தான் தமிழன். பூமாதேவி அவளுக்கு உயிர் இருக்கிறது. உயிர் இல்லாதவள் பிரசவிக்க முடியுமா? பெண் பிரசவிக்கின்றாள். கல் உடையலாம் பாறையை உருவாக்க முடியாது என்று கூறியவன் தமிழனே.

எத்தனை அற்புதங்கள் நிறைந்த தமிழ் என்று நினைக்கும் போது "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்ற ஒரு கவிஞனின் கூற்றுக்கு ஏற்ப "கத்தியை தீட்டாதே உன் புத்தியைத் தீட்டு" என்ற அண்ணாவின் கூற்றுக்கு ஏற்ப "வாழ்க தமிழ், தமிழனின் பெருமை வாழ்க."

நன்றி

*ஆக்கம் :- திருமதி. பாஸ்கரன் திராவிடமலர் - ஆசிரியை*

# சிறப்புற வாழ்வோம்

இன்று நாம் சிறுவர்கள்
எதிர்காலத் தலைவர்கள்
இதை நன்கு மனதில் நிறுத்தி
இனிதாக வளர்ந்திடுவோம்.


இளமையிலே கல்வி தனை
இனிதாய் கற்றிடுவோம்.
இனியொரு விதி செய்ய
எழிலாக நாம் எழுவோம்.

மாதா பிதா இறைதனை
மனதாரத் துதித்திடுவோம்
மாண்புறு ஆசான்களை
மதித்தே நாமும் நடந்திடுவோம்.

உற்றார் உறவினரை
உண்மையாய் நேசிப்போம்
அயலவர்கள் நண்பர்களை
அன்போடு உபசரிப்போம்

பொய் களவு பொறாமைகளை
இல்லா தொழித்திடுவோம்
பொன்னான ஒழுக்கத்தினை
போற்றியே வாழ்ந்திடுவோம்.

**நி.திசாந்தினி**
**தரம் 5A**



# மேன்மை தரும் ஒழுக்கம்

உலகில் உள்ள செல்வங்களுள் ஒழுக்கம் உயர்ந்த செல்வமாகும். ஒழுக்கம் இல்லாத வாழ்வு உப்பில்லா உயர்வுக்கு ஒப்பாகும். ஒழுக்கமில்லாதவர் எவ்வளவு அறிவுடையவராக இருந்தாலும் அவர் அறிவற்றவராகவே கருதப்படுவார். **"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"** என்ற குறளுக்கமைய ஒழுக்கம் உயிரை விட மேலானது என வள்ளுவர் கூறியுள்ளார். ஒழுக்கத்தின் மூலமாகவே மனிதர்களை உயர்ந்தவர் தாழ்ந்தவர் என பாகுபடுத்துகின்றனர். அறிவை தேடுவதற்கு முன்னர் ஒழுக்கத்தை கற்றுக்கொள்ள வேண்டும். நற்குலத்தில் பிறந்தவர்களிடம் எப்போதும் நல்லொழுக்கம் நிறைந்து காணப்படும். நல்ல ஒழுக்கம் எல்லாச் சிறப்புகளுக்கும் அடிப்படை. தீய ஒழுக்கம் இடையுறாத துன்பம் தரும். எங்களிடம் நிறந்த செல்வம், கீர்த்தி, மேலான கல்வி இருந்தும் எவ்வித பயனும் இல்லை. ஒழுக்கம் ஒன்றே ஒருவனுக்கு உயர்வைத்தரும்.

**பி.திஷோனிஎனா**
**தரம் 05A**



பாடசாலை உப அதிபர்



பகுதித் தலைவர்

# பொன்மொழிகள்

★ நல்ல எண்ணங்களைத் தூவினால் நல்ல பலனைப் பெறலாம்.

★ தோல்வியை ஏற்றுக் கொள்வது கஸ்டமானதுதான் ஆனால் வெற்றிக்கு முயற்சிக்காதது அதை விட மோசமானது.

★ யாரும் நம்மை கோபத்துடன் பேசினால் நாம் சஞ்சலப்படக் கூடாது. காரணம் ஏசுபவர்கள் நம் மேல் அதிக அக்கறை வைத்திருப்பார்கள்.

★ நாம் பிறரின் மன நிலையைப் புரிந்து கொண்டு வாழ்வோமானால் நம் மனநிலையை எல்லோரும் புரிந்து கொள்வார்கள்.

★ காலத்தை நீங்கள் வீணடித்தால் பிறகு காலம் உங்களை வீணடிக்கும்.

★ எதற்காகவும் எப்போதும் உங்களைத் தாழ்த்திக் கொள்ளாதீர்கள். கம்பீரமாக நிமிர்ந்து நில்லுங்கள்.

★ உங்களை ஒருவர் புகழ்ந்து பேசும் போது கவனமாக இருங்கள். திட்டும் போது அசட்டையாக இருங்கள்.

**மோ.தஸனிகா**

## புதிர்கள்

- ஆசிரியரை மாணவன் கேட்பதென்ன? முற்றத்தை சுத்தமாக்கத் தேவை என்ன?

  **விளக்குமாறு**

- இட்லி வேகுவது எதனாலே? இருட்டிலே பயமும் எதனாலே?

  **ஆவியால்**

- தங்கத்தோடு நகை செய்யத் தேவை என்ன? தண்ணீர் பருக உதவும் பாத்திரம் என்ன?

  **செம்பு**

- கூந்தல் அவிழ்ந்து கிடப்பதென்ன? கிழவி மெல்ல நடப்ப தென்ன?

  **முடியாமல்**



**யோ.அம்சியா**
**தரம் 3B**

# நேரத்தின் அருமை

எவனொருவன் தனது வாழ்வின் நேரத்தை சரியாக கடைப்பிடிக்கன்றானோ அவனேஉண்மையா வெற்றியாளன் எமது அன்றாட செயற்பாட்டிற்கு வெற்றியை அடைவதற்கான ஏணியாக நேரமே துலங்கி நிற்கின்றது. நேரத்தை சரியான முறையில் பயனுள்ள விதத்தில் கழிக்காதவன் வாழ்வில் முழுவதையுமே இழந்தவனாவான். ஒரு சிறந்த செயலை செய்வோமாயின் நேரத்தை பயனுடையதாக்குகின்றோம்.

எமது வாழ்வின் படகை ஓட்டிச் செல்வதற்கு நேரமே துடுப்புப் போன்று செயற்படுகின்றது. நேரத்தைப் பற்றிய பொன் மொழிகள் காணப்படுகின்றன. **"காலம் பொன் போன்றது"** என்பது இந்தியப் பழமொழி. **"ஓர் அங்குல நேரம் ஓர் அங்குலத் தங்கம்"** என்கின்றது சீனப் பழமொழி. நேரம் என்பது உடம்பிலுள்ள உயிரைப் போன்றது. அது போலதான் உயிரும் நேரமும் போனால் இறுதிவரைக்கும் எம்மிடம் திரும்பி வராது. யார் நேரத்தை சரியாக பயன்படுத்தி விட்டார்களோ அவர்களே எதிர்கால நாயகர்கள். பல அறிவியலாளர்கள்

நேரத்தை நல்ல முறையில் முகாமைத்துவம் செய்து சாதனை படைத்தவர்களை பல வரலாற்று நூல்களின் ஊடாக காணமுடிகின்றது. எமது இலட்சியத்தை நிறைவடைய வழி கோலும் நேரத்தை எவ்வாறு கழித்தோம் என்பது முக்கியமல்ல. மாறாக எந்த விதத்தில் பயன்படுத்தினோம் என்பதே இங்கு கவனிக்கப்பட வேண்டியது. நேரத்தை நல்ல முறையில் முகாமைத்துவம் செய்யாதவன் குருடனுக்கு சமனானவன் ஆவான். தனிமையில் இருக்கும் போதுதான் தனிமையின் தார்ப்பரியம் தெரியும். அது போல நேரத்தை கடைப்பிடிக்காதவனுக்குத்தான் அதன் அருமை புரியும். ஒரு வருடத்தின் பயனை இறுதித் தேர்வில் தோல்வியுற்ற மாணவனைக் கேளுங்கள். ஒரு மாதத்தின் பயனை முன்கூட்டியே பிறந்த குழந்தயின் தாயிடம் கேளுங்கள். ஒரு வாரத்தின் பயனை பத்திரிகை ஆசிரியரிடம் கேளுங்கள். ஒரு நாளின் பயனை தினக்கூலியாளிடம் கேளுங்கள். ஒரு மணி நேரத்தின் பயனை தொழிலதிபரிடம் கேளுங்கள். ஒரு நிமிடத்தின் பயனை புகைவண்டியைத் தவறவிட்டவரை கேளுங்கள். ஒரு வினாடியின் பயனை விபத்தில் தப்பியவரை கேளுங்கள். ஒரு மில்லி வினாடியின் பயனை ஒலிம்பிக்கில் பதக்கம் பெறத் தவறியவரைக் கேளுங்கள்.

***சி.கியூரிகா***
**தரம் 03B**



**இடமிருந்து வலமாக அமர்ந்திருப்பவர்கள்**

திருமதி.ஐ.சதீஸ்குமார், திருமதி.த.ஜீவானந்தம், திரு.க.கதிர்காமநாதன்(அதிபர்), திருமதி.ம.தயாளகுணதாஸ், திருமதி.லோ.ஜெயாபரன்

**இடமிருந்து வலமாக நிற்பவர்கள்**

திருமதி.க.வசந்தகுமார், திருமதி.ப.சின்னத்தம்பி, திருமதி.ற.சுபேந்திரகுமார், திருமதி.ஜெ.அருளப்பு, திருமதி.வி.ஹரிப்பிரதாப் திருமதி. வி.மோகனதாஸ், திருமதி.சு.சந்திரகுமார், செல்வி.செ.வாணிஸ்ரீ, திருமதி.நே.ராஜகுமார், திருமதி.தி.பாஸ்கரன்

காந்தள்

# ஓர் பிள்ளையின்

## கற்றல் வீதத்தை துரிதப்படுத்தும் நாளாந்த ஆரோக்கிய நடைமுறைகள்

- அதிகாலையில் விழித்தெழுதல்.
- போசனை நிறைந்த உணவுகளை உட்கொள்ளல்.
- போதியளவு நீராகாரங்களை அருந்துதல்.
- உணவு உண்பதற்கு முன்னரும் பின்னரும் நன்றாக பலதடவைகள் கைகளை கழுவுதல்.
- போதுமான அளவு தூக்கத்தை உறுதிப்படுத்தல்.
- விளையாட்டுக்கள் மூலமான உடற்பயிற்சி மற்றும் தூயகாற்றை தினமும் சுவாசித்தல்
- தொலைக்காட்சி பார்த்தல், கேளிக்கை நிகழ்வுகளில் ஈடுபடுதல் என்பவற்றை குறைத்துக்கொள்ளல்.
- பிள்ளைகளின் கல்வியில் வீட்டுச் சூழல் மற்றும் பாடசாலைச் சூழல் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றது. எனவே அவற்றில் பெற்றோர், ஆசிரியர்கள் மிகுந்த கவனம் எடுத்தல் வேண்டும்.

**கி.லிஷானி – தரம் 3B**

# அறிவிற்கு விருந்து

- ஒருவரைப் பற்றி சரியாக தெரியாத நிலையில் அவரைப் புகழவும் செய்யாதே. இகழவும் செய்யாதே.
- வாழ்நாள் முழுவதும் சிரமப்பட்டு பாடுபட்டு தேடிய அறிவை ஒரு நிமிடக் கோபம் அழித்து பாழாக்கிவிடும். அதனால் காரணமில்லாமல் கோபப்படக் கூடாது
- நாக்கு மூன்றங்குல நீளந்தான் உள்ளது. ஆனால் அது ஆறு அடி உயரமுள்ள மனிதனையும் கொன்றுவிடும். அதனால் தான் வள்ளுவர் **"நாகாக்க"** என்று எச்சரித்தார்.
- மனிதன் உண்மையை வெறுக்கலாம், உண்மையை புறக்கணிக்கலாம், உண்மையைக் கண்டு அச்சப்படலாம் ஆனால் உண்மை ஒரு போதும் அழிவதில்லை அது சாகாவரம் பெற்றது.
- உன்னை விட உயர்ந்த நிலையில் உள்ளவர்களைக் கண்டு எப்போதுமே வயிற்றெரிச்சல் படாதே, பொறாமை கொள்ளாதே அவர்கள் அந்த நிலையை அடைவதற்கு காரணம் என்ன என்பதை கண்டறிந்து நீயும் அதே வழியில் சென்று உன் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள முயற்சி செய்.
- நல்ல காரியத்தைச் சாதிக்க பல ஆண்டுகளைக் கூட செலவிட வேண்டி வரும். ஆனால் கெட்ட செயலை கண் மூடித்திறப்பதற்குள் செய்து விட முடியும்.
- அன்பு ஒன்றையே வாழ்க்கையின் பற்றுக் கோலாகக் கொள். நீ நிச்சயமாக மகிழ்ச்சியுடனும் இன்பத்துடனும் வாழ்ந்து விட முடியும்.

**க. திலக்ஷனா**
**தரம் 4A**

# சிறுவர்களை பாதுகாப்போம்

சிறு மலராக மலர்ந்து எதிர்காலம் பற்றிய கனவுகளுடன் வளரும் பிஞ்சுக்குழந்தைகளை பாதுகாத்து பூங்காவாக பூத்துக்குலுங்க செய்ய வேண்டியது நமது கடமையாகும்.

சிறுவர் பாதுகாப்பு என்பது 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நடைபெறும் வன்முறை, சுரண்டல், தீங்கிழைப்பு மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாத்து ஆரோக்கியமாக வாழ வழிசெய்வதாகும் சிறுவர்கள் தனித்துவம் வாய்ந்தவர்கள்.

அவர்களுக்காக பல பாதுகாப்பு உரிமைகள், சட்டங்கள், சமவாயங்கள் உள்ளன. அவை சர்வதேசரீதியிலும் செயற்படுகின்றன. ஐ.நா.சபையினால் சிறுவர் உரிமையை பாதுபாக்கும் உடன்படிக்கைகள் உருவாக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.


எடுத்துக்காட்டாக 1908 இல் இருந்து குழந்தைச்சட்டம் உருவானமை, 1990.11.20 இல் சர்வதேச சிறுவர் உரிமை பிரகடனம் உருவாகியது. 1991 இல் நம் திருநாடான இலங்கையும் அதில் கைச்சாத்திட்டுள்ளது. அத்துடன் 1954 இல் இருந்து சிறுவர் தினம் கொண்டாடுவதற்கான அவசியம் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இவை சிறுவர்களை பாதுகாப்பதற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இவ்வாறு முக்கியத்துவம் உள்ள போதிலும் சில பாதகங்களும் நடைபெறுகின்றன. அவற்றில் பாலியல் துஷ்பிரயோகம், வேலைக்கு அமர்த்துதல், கடத்தல், கட்டாயத் திருமணம், ஆதரவின்மை போன்ற காரணிகளால் பெரிதும் சமூக பிரச்சினைகள் உருவாகின்றன. இவ்வாறான சமூகப் பிரச்சினைகளில் இருந்து சிறுவர்களை பாதுகாக்க இலங்கையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதாவது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மூலம் 1992ல் இருந்து இலங்கையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறுவர் பாதுகாப்பு பற்றி ஆராய்வதற்கு ஜனாதிபதியினால் செயலணிக்குழு அமைக்கப்பட்டது. ஜனாதிபதியின் நேரடி கண்காணிப்பால் உருவான பேண்தகு திட்டத்தின் ஒரு கருப்பொருளாக சிறுவர் பாதுகாப்பு காணப்படுகிறது. சிறுவர் தொடர்பான துஷ்பிரயோகங்களை குறைப்பதற்காக "1929" என்ற தகவல் சேவைமைய இலக்கம் செயற்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகளால் நம் நாட்டிலும் சிறுவர் துஷ்பிரயோகம் குறைக்கப்பட்டு நாளைய தூண்களை கட்டியெழுப்ப முயல வேண்டும். அந்த வகையில் **"இன்றைய சிறுவர் நாளைய தலைவர்"** எனும் வாசகத்திற்கு அமைய தம் வகிபாகத்தை சரிவர நிறைவேற்றி ஊக்குவித்தால் நிச்சயமாக எதிர் காலத்திற்காக சிறந்ததொரு சக்தியை உருவாக்கலாம்.

*"வாழ்க சிறார்கள் சமுதாயம்"*

**திருமதி ஜனனி சதீஸ்குமார்**

**ஆசிரியை**

# வெற்றிலை தரும் மருத்துவம்



- வெற்றிலைச் சாறு சிறுநீரைப் பெருக்குவதற்கும் பயன்படுகின்றது. வெற்றிலைச் சாற்றுடன் நீர் கலந்து பாலையும் பருகிவர சிறுநீர் நன்கு வெளியேறும்.
- குழந்தைகளுக்கு வரும் காய்ச்சல், தடுமலுக்கு வெற்றிலைச் சாற்றை தேனுடன் கலந்து கொடுத்தால் குணமாகும்.
- குழந்தைக்கு மலச்சிக்கல் ஏற்பட்டால் வெற்றி லைக் காம்பை ஆமணக்கு எண்ணெயில் தோய்த்து ஆசன வாயில் செலுத்த உடனடியாக மலம் கழியும்.
- வெற்றிலைச்சாறு 15மி.லீ அளவு வெந்நீரில் கலந்து கொடுக்க வயிற்று உப்புசம், மந்தம், ஜன்னி, சீதளரோகம், தலைவலி, நீர் ஏற்றம், வயிற்றுவலி குணமாகும்.
- சுக்கு, மிளகு, திப்பிலி சம அளவு கலந்து வெற்றிலைச் சாறு, தேன் கலந்து அருந்த ஆஸ்துமா குணமாகும்.
- வெற்றிலையை கடுகு எண்ணெயில் போட்டு லேசாக சூடு செய்து மார்பில் வைத்துக் கட்டிவர மூச்சுத் திணறல் மற்றும் இருமலுக்கு சுகம் தரும்.
- வெற்றிலையை அனலில் வாட்டி அதனுள் ஐந்து துளசி இலையை வைத்துக் கசக்கிப் பிழிந்து சாறு எடுத்து 10 மாதக் குழந்தைக்கு 10 துளிகள் காலை, மாலை கொடுக்க சளி, இருமல் குணமாகும். அனலில் வாட்டிய வெற்றிலையை மார்பிலும் பற்றாகப் போட சளி குறையும்.
- வெற்றிலையை அரைத்து கீழ்வாத வலி ,வீக்கம் முதலியவைக்கு வைத்துக் கட்ட நல்ல பலன் தரும்.
- வெற்றிலையில் சிறிது ஆமணக்கு எண்ணெய் தடவி லேசாக வாட்டி கட்டிகளின் மேல் வைத்துக் கட்டிவர கட்டிகள் உடைந்து சீழ் வெளிப்படும். இதை இரவில் கட்டுவது நல்லது.
- விடாது மூக்கில் ஒழுகும் சளிக்கு வெற்றிலைச் சாற்றை மூக்கில் விட குணமாகும்.

***மு. தஷானுகா***
**தரம் – 5A**

# சிந்தனைத் துளிகள்



- நீ ஒரு மனிதனாக வேண்டும் என்றால் உனக்கென ஒரு இலட்சியத்தை வகுத்துக் கொண்டு அதை அடைவதற்காக அயராது பாடுபடு . இலட்சியம் இல்லாத வாழ்கை அலட்சிய வாழ்க்கைதான்.
- பிறருக்கு புத்தி சொல்ல நீ பிரயாசைப்படுவதை விட பிறர் கூறும் நல்ல புத்திமதிகளை ஏற்று செயற்பட்டால் உன் வாழ்க்கையில் நல்ல உயர்வு ஏற்படும்.
- நீங்கள் நன்மையை நேசியுங்கள். உண்மையிடம் விசுவாசம் வையுங்கள் அப்பொழுது உங்கள் வாழக்கையில் இன்பம் மனம் கமழும்.
- தன்னைத்தானே தாழ்த்திக் கொள்ளும் மனோபாவம் கொடியதோர் வியாதியின் குறியாகும்.
- புத்தகத்தை வாங்கலாம் அறிவை வாங்க முடியாது. உணவை வாங்கலாம் பசியை வாங்க முடியாது. ஆபரணத்தை வாங்கலாம் அழகை வாங்க முடியாது. மருந்தை வாங்கலாம் ஆரோக்கியத்தை வாங்க முடியாது. படுக்கையை வாங்கலாம் உறக்கத்தை வாங்க முடியாது.
- பண சக்திதான் வாழ்க்கையின் வெற்றிக்கு ஆதாரம் என்று சிலர் எண்ணுவது தவறு. மன சக்திதான் வாழ்க்கையின் வெற்றிக்கு உண்மையான அடிப்படை.

**ம.சப்தமி**
**தரம் 4A**

# அப்பா



தாய் என்பவள் பாடத்தைக் காட்டுவாள் – ஆனால்
தந்தை அறிவை ஊட்டுவார்
தந்தை நாம் தடுமாறி விழுந்தாலும் அடுத்த முறை
தடுமாறக் கூடாது என நினைப்பவர் அப்பா.

தாயிற் சிறந்த கோயிலும் இல்லை தந்தை சொல் மிக்க
மந்திரம் இல்லை என சொல்லித் தந்தவரே அப்பா.
பொறுமை இல்லாதவர் கூட ஒரு குழந்தைக்கு தகப்பனாக முடியும்
ஆனால் பொறுப்புள்ளவர் தான் உண்மையான தகப்பனாவார்.

எல்லோருக்கும் கடவுள் வரம் கொடுப்பார் என
எல்லோரும் நினைப்பார் ஆனால்
ஒருவரும் நினைப்பதில்லை வரம் கொடுக்கும்
கடவுளே நம் அப்பாதான் என்று.

தன் பிள்ளைக்கு எப்போதும் கஷ்டம் நினைக்காதவர் அப்பா.
தான் எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும்
தன் குடும்பத்தை பாரமாக நினைக்காதவர் அப்பா.
அப்பாவை மறக்காதே அரவணைப்பை வெறுக்காதே.

**சு.அரேஸ்மிதன்**
**தரம் –5B**

# அம்மா



மூன்றெழுத்து கவிதை கேட்டால் முதலில் சொல்வேன்
அம்மா என்று காரணம்
பெண்ணாக பிறந்ததை வரமாக நினைத்து
வாழ்பவள் அம்மா

அம்மா இந்த உலகில் எந்த மூலையிலும் கிடைக்கவில்லை
உன் கருவறையில் கிடைத்த பாதுகாப்பு.
உலகில் தேடித்தேடி அலைந்தாலும் மீண்டும் அமர முடியாத
சிம்மாசனம் அம்மாவின் கருவறைதான்.

உயிரெழுத்தில் "அ" எடுத்து. மெய் எழுத்தில் "ம்" எடுத்து
உயிர் மெய் எழுத்தில் "மா" எடுத்து தமிழிற்கே
முத்தாக திகழ்வாள் அம்மா.
படுத்துக் கொண்டே சொர்க்கம் காணவைக்கும்
தாயின் மடியே.

வார்த்தைகள் இல்லாத வடிவம் அளவுகோலே இல்லாத அன்பு
சுயநலம் இல்லாத இதயம் வெறுப்புக்காட்டாத முகம் அம்மா.
கோபித்துக் கொண்டால் மறு நொடியே செல்லம் என
ஓடி வந்து கட்டி அணைக்கும் அன்னையை நேசிப்போம்.

ஜெ.தர்மிஜா – தரம் 4A

## மருத்துவக் குறிப்புகள்

*மாரடைப்பைத் தடுக்கும் புடோலங்காய்*

இதயம் பலவீனமானவர்கள் புடோலங்காயை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வதோடு அன்றாடம் காலையில் எழுந்து புடோலங்கொடியின் இளந்தளிர் இலைகளை பறித்து சுத்தம் செய்து சாறாக பிழிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அதை ஒரு வேளைக்கு இரண்டு தேக்கரண்டி வீதம் காலை, மாலை என இரண்டு வேளை சாப்பிடுவதால் இதயம் பலம் பெறும். இதய நோயாளிகள் 48 நாட்கள் தொடர்ந்து புடோலங்காய் சாறு குடித்து வந்தால் உடல் நலம் பெற முடியும்.

*முடக்கொத்தான் கீரை*

- ★ முடக்கொத்தான் கீரையை தொடர்ந்து உணவில் சேர்த்துக் கொள்வதன்மூலம் மலச்சிக்கல் மூலநோய், கிரந்தி, பாதவாதம் போன்ற நோய்கள் குணமாகும்
- ★ கத்தரிக்காய் - கேன்சர் வராமல் தடுக்க உதவுகிறது.
- ★ முருங்கைக்காய் - இரத்தத்தைச் சுத்திகரிக்கும்.
- ★ உருளைக்கிழங்கு - நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும்.
- ★ புடோலங்காய் - சக்கரை நோயைக் கட்டுப்படுத்த உதவுகின்றது.
- ★ பாகற்காய் - நீரிழிவு நோயைக் குணமாக்கும்.
- ★ வாழைப்பூ - சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும்.
- ★ பீர்க்கங்காய் - கண் பார்வைக் குறைபாட்டை சரிசெய்கின்றது.

திருமதி. விஜயலெட்சுமி மோகனதாஸ் ஆசிரியை

# விவேகானந்தரின் பொன்மொழி

நோக்கம் எது என்பதை முதலில் தீர்மானி
அதுவே இலக்கு என்பதை உறுதி செய்து கொள்.
கையில் பணமில்லையே உடலில் வலுவில்லையே
உதவி செய்ய நண்பர்கள் இல்லையே
என்றெல்லாம் யோசித்து நேரத்தை வீணாக்காதே .
எதற்கும் பயப்படாதே தயங்காதே
தொடர்ந்து முன்னேறு
சோதனைகள் விலகும் பாதை தெளிவாகும்.
நோக்கத்தை அடைந்தே தீருவாய்
அதை யாராலும் தடுக்க முடியாது



பு.அனாயா
தரம் 4A

# ஏக்கம்

பத்து மாதம் சுமந்து
என்னை பெற்றெடுத்தாயே
இரவு பகல் பாராது
என்னை தாலாட்டினாயே

பாராட்டி சீராட்டி
பால் ஊட்டினாயே
தத்தி தவழ்ந்து வர
மகிழ்ந்து அணைத்தாயே

நிலாக் காட்டி கதை கூறி
உணவு ஊட்டினாயே – ஆனால்
“அ” சொல்லித் தரும் முன்
வெளிநாடு சென்றாயே
அம்மா யாரிடம் கேட்பேன்
நான் பாடம்
தந்தையிடம் சென்றால் அவர்
போதையில் அலம்பல்
அம்மம்மாவிடம் கேட்டால் அவர்
நோய் வலியால் புலம்பல்
நான் எப்படிப் படிப்பேன் அம்மா
நீங்கள் விரைவில் வர வேண்டும்
என் ஏக்கம் தீர.

ம.ரிதுக்ஷன்
தரம் 3A



# கணினி பற்றி அறிவோம்

கணினி என்பது நாம் உள்ளீடு செய்யும் தரவுகளை பெற்று அதனை செயற்படுத்தி ***(Process)*** அதற்கு இணையாக வெளியீடுகளை தரும் ஒரு மின்னனு சாதனம் ***(Electronic Device)*** ஆகும்.
கணினியின் முக்கிய பாகங்கள்



- உள்ளீட்டு கருவி ***(Input Device)***
- மைய செயற்பாட்டுப் பகுதி ***(Central Processing Unit)***
- நினைவகம் ***(Ram)***
- வெளியீட்டுக் கருவி ***(Out put Device)***

உள்ளீட்டுக் கருவி என்பது நாம் தரவுகளை கணினிக்கு உள்ளீடு செய்ய பயன்படும் சாதனம் ஆகும். அவையாவன.

1. விசைப்பலகை ***(Key Board)***
2. சுட்டெலி ***(Mouse)*** போன்றவற்றை குறிப்பிடலாம்.

வெளியீட்டுக் கருவி என்பது கணினி நமக்கு வெளியீடு தர பயன்படும் சாதனமாகும்.

1. ஒளித்திரை ***(Moniter)***
2. திவெடுக்கும் கருவி ***(Printer)*** போன்றவற்றை குறிப்பிடலாம்.

மைய செயற்பாட்டு பகுதி ***CPU(Computer Processing Unit)*** என்பது நாம் உள்ளீடு செய்யும் தரவுகளை செயற்படுத்தி நமக்கு வெளியீடாக தரும் சாதனமாகும். இதன் முக்கிய பாகங்களாவன.

1. தாய்ப்பலகை ***(Mother Board)***
2. வன் தட்டு ***(Hard Disk)*** போன்றவற்றை குறிப்பிடலாம்.

தாய்ப்பலகை ***(Mother Board)*** இது கணினிக்கு தாய் போன்றது. இதனால்தான் இது தாய்ப்பலகை என அழைக்கப்படுகிறது. இது போன்ற ஏனைய நுண்ணிய பாகங்களும் பொருத்தப்பட்டு இருக்கும்.
***Processor*** இது கணினியின் மூளை போன்றது. இது அனைத்து விதமான செயல்களையும் பரிசீலித்து செயற்பாட்டுக்கு உட்படுத்தப்படும். இதன் வேகம் ஜிகா ஹெட்ஸ்ல் குறிக்கப்படும்.

***Ram (Random Access Memory)*** இது ஒரு நினைவகம் ஆகும். ஆனால் இதை பயனாளர் நேரடியாக பயன்படுத்த முடியாது. இதனை ***Processor*** மட்டுமே பயன்படுத்த முடியும். நாம் செலுத்தும் உள்ளீடுகள் ***Ram*** இதற்கு செல்கிறது அதனை ***Processor*** எடுத்து பயன்படுத்துகிறது. இதன் அளவு ***GB***.ஜிகாபைட் ஆகும்.

நினைவகம் ***(Hard Disk)*** இது தரவை பதித்துவைத்து தேவையான போது உபயோகப்படுத்தும் பகுதி இது போன்று ***Pendrive , Hash Drive, DVD ,CD*** போன்றவற்றிலும் தரவை சேமித்து வைக்கலாம்.

***Operating System*** இது கணினியின் இதயம் போன்றது. இது கணினியின் அனைத்து செயற்பாடுகளும் சரியான முறையில் இயங்க வழி செய்யும். இதன் வகைகள் ***Windows, Dos, Linux, Unix*** போன்றவை பிரபலமானவை. அத்தோடு கணினிக்கு தெரிந்த மொழி 01 மாத்திரமே. நாம் உள்ளீடு செய்யும் தரவுகளை இம் மொழிக்கு மாற்றியே புரிந்து கொள்ளும். இதற்கு கொம்பைலர், இன்டபிரிட்டர் என மொழி மாற்றிகள் பயன்படுத்தப்படுகிறது.

**அ.அக்ஷதன்**
**தரம் 4A**

# அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம்

கல்வியானது மனிதனை மனிதனாக வாழ நெறிப்படுத்தும் அல்லது வழிகாட்டும் அம்சமாகும். இக் கல்வியானது இரு அம்சங்களாக நோக்கப்படுகின்றது. ஒன்று புறவுலகத் தொடர்பான உலகியல் பற்றிய கல்வி இது வெறும் புத்தகப்படிப்பைத் தவிர வேறன்று. இக்கால உலகில் இதனை நன்கு கற்றறிந்து நன்கு தேர்ச்சி பெற்ற பலரை நாம் காண்கின்றோம். இரண்டாம் அம்சமான உயிரூட்டும் கல்விக்கு உள்ளிருப்பதனை வெளிக்கொண்டுவருதல் என்பதே பொருள்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மனித மேம்பாடுகள் மறைந்திருக்கின்றன. அவை உள்ளே மறைந்து இருப்பதனால் மனிதர்களுக்கு அவை பற்றிய உணர்வு இல்லை. மனிதர்களுக்கு மனித மேம்பாடுகளை வெளிப்படுத்த உந்துதல் கொடுக்கக் கூடியவர்களே இன்றைய தேவை இம் மேம்பாடுகளை நாளாந்த வாழ்வில் இணைப்பதும் இணைக்கத் தூண்டுவதும் தான் உண்மையான கல்வி.

ஆன்மீக முன்னேற்றத்திற்கும் குழந்தைகளின் நன்னடத்தையை உருவாக்குவதற்கும் உரிய பொறுப்பை ஏற்று மனித ஒருமைப்பாட்டினை வலியுறுத்தும் இந்துக்களின் செழிப்பான பண்பாடு மற்றும் ஆன்மீகப் பாரம்பரியத்தினை அவர்களுக்கு எடுத்துரைப்பதற்கும் அறநெறிப்படிவாழ்க்கையை வாழ்ந்திடுவதற்காக இந்து சமய அறநெறிக் கல்வி தோற்றுவிக் கப்பட்டது எனலாம்.

**"இளம் இந்து சிறார்களின் இதயங்களில் உள்ள தெய்வீகத் தாமரையை மலரச் செய்து அவர்களின் ஆளுமையும் திறமைகளும் மலர்ந்து விரிவடைய வைக்கும் கல்வியை வழங்குதல்"** என்ற இலட்சியத்துடன் அறநெறிக் கல்வியானது முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

மனிதனை பண்புள்ளவனாக மனிதநேயத்தைக் காப்பவனாக வாழ வழி செய்கின்றது. குழந்தையிடம் கடமை ***(Duty),*** பக்தி ***(Devotion),*** ஒழுக்கக் கட்டுப்பாடு (Discipline), விவேகம் (Diserimination), மன உறுதி (Determination) ஆகியவற்றை வளர்க்கின்றது. அன்பு, அறம், கருணை இவற்றை எல்லாம் தெளிவுபடுத்துகின்றது. மனதை ஒரு நிலைப்படுத்திக் கடவுள் நம்பிக்கையுடன் பிரார்த்தனை மேற்கொள்ள வழிகாட்டி வாழ்க்கையில் நல்லவற்றையெல்லாம் செய்து நல்லதோர் சமூதாயச் சூழலை ஏற்படுத்த வழி செய்கின்றது.

அறநெறிக் கல்வி மூலம் பெற்றோரும், வயதில் மூத்தவர்களும், அறநெறிப் பாடசாலைச் சிறுவர்களிடமிருந்து நல்ல விடயங்களை கற்றுக் கொள்கின்றார்கள். அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மனதில் நல்வழிச் சிந்தனைகளை ஊட்டி புலனடக்கமும், மனக்கட்டுப்பாடும் நல்லொழுக்கமும் உடைய உத்தமர்களாக வாழ வழி செய்கின்றது.

அறநெறிக் கல்வியின் மூலம் சமூதாயம் மேன்மை பெறும் எனும் நோக்குடன் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிப் பாடசாலைகளையும் அறநெறிப் பாடத்திட்டத்தினையும் ஒழுங்கு செய்து எல்லா மதத்தவரும் இளமையில் அறநெறியினை பெற வேண்டும் என்பதற்காக இதனை திட்டமாக அமுல்படுத்தியுள்ளது.

இந்துக்கள் அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தினை அறிந்தும் அறியாதவர் போல் சமூகத்தில் வாழ்வது வேதனைக்குரிய விடயமே. இளம் சமூகம் சீர்கெட்டுப் போவதை ஏற்கலாமா? இக் கல்வியின் மூலம் வீட்டுக்கும், சமூகத்திற்கும், ஏன் நாட்டிற்கும் ஏற்புடைய நல்ல மனிதர்களை உருவாக்கக் கூடிய வல்லமை இருக்கிறது.

இக் கல்வியின் முக்கியத்துவத்தினை அறிந்து மாணவசமூகம் சீர் பெறவும் சமூகமும் நாடும் செழிக்க பெற்றோர்கள் அறநெறிக்கல்வியின் முக்கியத்துவம் பற்றி அறிந்து அக்கல்வினை பெறுவதற்கு தூண்டுதலாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு குழந்தையினுள்ளும், மாணவ மாணவியினுள்ளும், இளைஞரினுள்ளும் உள்ள மனித மேன்மையை வெளிக் கொணர்ந்து தாம் ஒவ்வொருவரும் தெய்வீகமானவர்கள் என்பதனை உணரவைத்து அவர்களுட் புதைந்திருக்கும் மனித மதிப்பீடுகளை வெளிக்கொணர்ந்து அவற்றை தம் தினசரி வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வைக்கின்றது. எனவே அறநெறிக் கல்வி மூலம் இந்துக்களாகிய நாம் பயன்பெறுவோம்.

**திருமதி தனுசியா ஜீவானந்தம்**
**(ஆசிரியை)**

# சித்திரைப் புத்தாண்டு

தமிழன் வாழுகின்ற நாடுகளில் பல சாதியும் உண்டு. பல சமயமும் உண்டு. ஆயினும் தமிழர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு ஓர் புனித நாள். வீதி தோறும் மங்கள முழக்கம். கார் உலாவும் வானம் மறைந்து, நீர் உலாவும் ஏரியும் கருணை காட்டும் காலம். இயற்கை அன்னை பசுமையாக உடை உடுத்து பன்னிறப் பூக்களைச் சூடி இனிய காயும், கனியும், கரும்பும் அணிந்து இன்பக் காட்சி தரும்.

மேட ராசியில் சூரியன் சந்திக்கும் காலம் சித்திரைப் புத்தாண்டு என அழைக்கப்படும். **"மேஷ சஸ்கிராந்தி எனப்படும்"** பங்குனி மாதம் கழித்தால் எங்கும் மங்கல ஒலி முழக்கம். **"கூனி குடி போகாதே ஆனி அடி கோலாதே"** என்பது பழமொழி. சித்திரை மாதம் இளவேனில் தொடங்குகிறது வசந்தம் என்னும் இளவேனில் இன்ப சுகம் தரும். பசுமையான சோலைகள் பார்க்குமிட மெங்கும் கண்ணுக்கு விருந்தாகும். மாமரங்கள் மெல்லிய தளிர் நடை அணிந்து இலங்கும், வேம்பின் கொம்பிலே வெண்மலர்கள் பூத்து மணம் வீசும், தென்னைகளில் இளநீர் காய்த்துக் குலுங்கும், பனை மரங்களிலே பதநீர் வடியும், பசுங்கிளிகள் மழலை பேசி கொஞ்சிக் குலாவும், கருங்குயில்கள் மறைந்திருந்து கூவும், மன்மதன் மறைந்திருந்து ஆட்சி செய்யும் காலம் இவையெல்லாம் நிறைந்த காலமே சித்திரைப் புத்தாண்டு.

**பா.காயத்திரி**
**தரம் 1A**

# உணவுப்பழக்கம் பழமொழி வடிவில்

- சீரகம் இல்லாமல் உணவு சிறக்காது.
- தன்காயம் காக்க வெங்காயம் போதும்.
- வாழை வாழ வைக்கும்.
- அவசர சோறு ஆபத்து.
- இரப்பைப் புண்ணுக்கு எலுமிச்சைச் சாறு.
- இரத்தக் கொதிப்புக்கு அகத்திக் கீரை.
- இருமலைப் போக்கும் வெந்தையக் கீரை.
- உண்ணா நோம்பு ஆயுளைக் கூட்டும்.
- உஷ்ணம் தவிர்க்க கம்பங் களி.
- கல்லீரல் பலம் பெற கொய்யாப்பழம்.
- கோலஸ்ரோல் குறைக்க பன்னீர் திராட்சை.
- பித்தம் தெளிய வில்வம்.
- சிறுநீர் கடுப்புக்கு அன்னாசி.
- சூட்டைத் தணிக்க கருணைக் கிழங்கு.
- ஜீரணசக்திக்கு சுண்டைக்காய்.
- தலைவலி நீக்க முள்ளங்கிச்சாறு.
- தேனுடன் இஞ்சி இரத்தத் தூய்மை.
- மூல நோய் தீர வாழைப்பூக் கூட்டு.
- வாந்திக்கு மருந்து மணித் தக்காளி.
- வாத நோய் தடுக்க அரைக் கீரை.
- வாய் துர்நாற்றம் தீர்க்க ஏலக்காய்.
- பித்தம் தனிக்க நெல்லிக்காய்.
- பருமன் குறைய முட்டைக்கோஸ்.
- இனிய குரலுக்கு அதிமதுரம்.

**திருமதி ஜெமினேஸ்வரி அருளப்பு – ஆசிரியர்**

# கவனத்தில் கொள்வீரே

பிஞ்சு மொழி பேசி
கூட்டமாக பாடித்திரிந்த
பச்சைக் கிளிகள் நாங்கள்.
வண்ண வண்ண பழங்களை



வயிராற உண்டு விட்டு
வளத்தோடு வாழ்ந்த எங்களால் - இன்று
பசி தீர்க்கும் ஒரு பழ மரத்தையும்
காணமுடியவில்லையே!



"மரங்களைத் தறிக்காதீர்" என்ற
கட்டளையை மதிக்காத
மனிதர்களால் பழ மரங்கள்
வெட்டி வீழ்த்தப்படுகின்றது.

பழ மரங்கள் இல்லாததால் எம்
பசி தீர்வதாக இல்லை
பச்சைக் கிளிகள் நாம் பசியால்
வாடித் தவிக்கின்றோம்.
கேடு கெட்டமானிடரே
இதை கவனத்தில் கொள்ளீரே

**ம.ஹிறோசித் – தரம் 3A**

## பாடசாலை மலர்குழுவினர்




இடமிருந்து வலமாக அமர்ந்திருப்பவர்கள்
திருமதி.ஜெ.அருளப்பு, திருமதி.த.ஜீவானந்தம், திரு.க.கதிர்காமநாதன்(அதிபர்), திருமதி.ம.தயாளகுணதாஸ், திருமதி.லோ.ஜெயாபரன்
இடமிருந்து வலமாக நிற்பவர்கள்
திருமதி.ப.சின்னத்தம்பி, செல்வி.செ.வாணிஸ்ரீ, திருமதி.ஜ.சதீஸ்குமார், திருமதி.ற.சுபேந்திரகுமார்

## பாடசாலை அபிவிருத்திக் குழு



இடமிருந்து வலமாக அமர்ந்திருப்பவர்கள்:
திருமதி.சு.சந்திரகுமார், திருமதி.ம.தயாளகுணதாஸ், திரு.க.கதிர்காமநாதன்(அதிபர்), திருமதி.த.ஜீவானந்தம், திருமதி.லோ.ஜெயாபரன், செல்வி.செ.வாணிஸ்ரீ,
இடமிருந்து வலமாக நிற்பவர்கள்
திருமதி.ச.சுரேஸ்கண்ணா, திருமதி. நி.வாசன், திருமதி. சி.பாக்கியராஜா, திரு.கி.கெங்கேஸ்வரன், திரு.த.தித்தியானந்தன், திரு.சி.மோகனதாஸ், திருமதி.தி.சந்திரசேகரம், நி.புஸ்பகுமார், திருமதி.ரா.பிரபாகரன்

# புதிர்களும் விடைகளும்



1. போருக்குச் செல்லும் பாய் ஆனால் படுக்க முடியாத பாய் அது என்ன?

   ***சிப்பாய்***

2. ஒரு கரண்டி மாவு ஆனால் ஊரெல்லாம் தோசை அது என்ன?

   ***நிலா***

3. கறக்காத பால் பூக்காத பூ செய்யாத பாத்திரம் அது என்ன?

   ***தேங்காய்ப் பால் - தேங்காய்ப் பூ - தேங்காய் ஓடு***

4. பெண் ஒருத்தி ஆயிரம் புடைவைகள் கட்டிக் கொள்வாள் அவள் யார்?

   ***வெங்காயம்***

5. அம்மா சேலையை மடிக்க முடியாது, அப்பா காசை எண்ண முடியாது அது என்ன?

   ***வானம் - நட்சத்திரம்***

6. வெட்டிக் கொள்வான் ஆனாலும் ஒட்டிக் கொள்வான் அவன் யார்?

   ***கத்தரிக்கோள்***

7. கண்ணில் தென்படுவான் ஆனால் கையில் பிடிபடமாட்டான் அவன் யார்?

   ***புகை***

8. தண்ணீர் இல்லாமல் வளரும் தண்ணீர் இல்லாமல் படரும் அது என்ன?

   ***கூந்தல்***

9. கடலுக்குள் பூத்து கோயிலில் முழங்குவது அது என்ன?

   ***சங்கு***

10. கடல் நீரில் பிறந்து மழை நீரில் மறையும் அது என்ன?

    ***உப்பு***

**ச.டியோனா**

**தரம் 5B**

# அழகு

அழகு அழகு - இந்த
அவனி எங்கும் பேரழகு
பருகு பருகு - உந்தன்
பார்வையால் அதைப்பருகு
பருக இதயக் கதவு திறக்கும்
புதிய புதிய கவிதை பிறக்கும்

உதய காலச் சூரியன் அழகு
உவகையில் சிரிக்கும் மலர்களும் அழகு
ஊதும் வண்டின் நாட்டியம் அழகு
உழைக்கும் மக்களின் வியர்வையும் அழகு
உண்மை பேசும் உதடுகள் அழகு
உதவி செய்யும் கைகளும் அழகு

பசுமை கொஞ்சும் வயல்வெளி அழகு
பாடும் ஓடையின் நீரலை அழகு
பாயும் மீனின் கூட்டமும் அழகு
பறந்து திரியும் பறவைகள் அழகு
பார்வாழ சேறாகும் பாதங்கள் அழகு
பாசம் பொங்கும் விழிகளும் அழகு

பால் மணம் மாறாத பாலகர்கள் அழகு
பேசும் மழலை மொழிகளும் அழகு
பூவாய் ஒளிரும் புன்னகை அழகு
பொன்னடி போடும் தளர்நடை அழகு
பிள்ளை உள்ளமது கொள்ளை அழகு
பேரன்பில் விளையும் பூமியெங்கும் அழகு

**திருமதி றஜினி சுபேந்திரகுமார்**
**ஆசிரியர்**

# எனது ஆசிரியர்


எனது ஆசிரியர்
என்றும் இனிய ஆசிரியர்
பாடங்களை தெளிவாக
பயிற்றுவிக்கும் ஆசிரியர்

தேனான குணம் கொண்ட
தெவிட்டாத ஆசிரியர்
அன்புடனே முகமலர்ந்து
அரவணைக்கும் ஆசிரியர்

கண்டிப்புடன் கருணைகொண்ட
கனிவான ஆசிரியர்
பேதைகளை மேதைகளாய்
மாற்றி விடும் ஆசிரியர்

எழுத்தறிவித்த இறைவன் ஆவார்
என்றென்றும் வாழியவே!
பணிந்திடுவீர் பிள்ளைகளே!
பணிவுடனே அவர் அடியை.

**பு.முபிரஷனன்**
**தரம் 2B**



# பனை மரம் பேசுகின்றேன்



நான் உயரத்தால் மட்டுமல்ல்
உள்ளத்தாலும் உயர்ந்தவன்!
வெறுப்புத்தரும் கருப்புத்தான் என் நிறம்!
இனிப்பு தரும் கரும்புக் கட்டி என் மனம்!
இல்லையென சொல்லாதவன்
என்னையே தருபவன்!

நுங்கு தருவேன்!
கிழங்கு தருவேன்!
சுத்தமான கள் தருவேன்!
சுவையான பதநீர் தருவேன்!
கற்கண்டு தருவேன்!
தமிழ் சொற்கொண்டு எழுத
ஓலைச் சுவடியும் தருவேன்!


படுக்க பாய் தருவேன்!
விசிறியும் தருவேன்!
நார் கயிறும் தருவேன்!
உயிரும் தருவேன்
விழுந்தால் உங்கள்
வீட்டுக்கு விட்டமாவேன்
வெட்டினாலும் சட்டமாவேன்
நண்பர்களே உடல் தானம் பேசுகின்றீர்கள்
இன்று அன்று தொட்டும் நான்- அதைத்தானே
செய்தேன்.

தொன்று தொட்டு தொண்டு செய்யும் எனக்கு
நிமிர்ந்து வளர நீர் வார்த்தீரா?
நிலத்தை உழுது நலம்பட காத்தீரா?
இருந்தும் உமக்கு உதவுகிறேன் பார்த்தீரா?

நான் பிரதிபலன் பாராதவன்!
பிறரிடம் எதுவும் கேளாதவன்!
அதனால் தான் கற்பகத்தருவாவேன். ஒன்று மட்டும் கேட்பேன்
நீங்கள் அள்ளி அள்ளி அளிக்க வேண்டாம் என்னை அழிக்காமல் விட்டாலே போதும்.

தி. பவிசாளினி – தரம் 4B

# எங்கள் பாடசாலை



எங்கள் நல்ல பாடசாலை
எமக்கு பிடித்த பாடசாலை
உயர்வான பாடசாலை
உள்ளம் கவரும் பாடசாலை

ஆயகலைகள் அனைத்தையும்
அள்ளிக் கொடுக்கும் பாடசாலை
அவனியில் எம்மை என்றும்
சிறக்க வைக்கும் பாடசாலை

அருமையான பாடசாலை
அழகான பாடசாலை
வண்ணமான பாடசாலை
கலைவாணி உறையும் பாடசாலை

**ச. சதிஞ்சன்**
**தரம் 3A**

# கடிகாரம்

சின்னச் சின்னக் கடிகாரம்
சிறப்பு மிக்க கடிகாரம்
என்றும் எங்கள் நேரத்தை
எடுத்துக் காட்டும் கடிகாரம்
அண்ணன் தம்பி போலவே
அழகு முட்கள் இரண்டுண்டு
ஒன்றன் பின்னே ஒன்றாக
ஓடி சுற்றி மணிகாட்டும்

**சி.சஜனா**
**தரம்– 3B**




## இலங்கையில் உள்ள மூலிகைத் தோட்டங்கள்

நாவின்ன
ஹல்து முல்லை
கிராந்துருக் கோட்டை
பட்டிபொல
பின்னதுவ

**கோ. அனஸ்டன்**
**தரம் 5B**

# முன்பள்ளிக் கல்வியும் பெற்றோர்களின் புரிதலும்

**இ**ன்று முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவம் குறித்து இலங்கையின் பல்வேறு மட்டங்களிலும் உணரப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். முன்னொரு காலத்தில் எமது நாட்டில் பாலர் வகுப்பு **(அரிவரி)** என்றொரு வகுப்பு நடைமுறையில் இருந்தது அதன் பின்பே தரம் 1இல் மாணவர் சேரக் கோரப்படுவர். காலப்போக்கில் அது கைவிடப்படும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது. அதாவது பிள்ளைக்கு 5 வயது நிறைவடைந்த பின்னரே பாடசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்தது எனலாம்.

வளர்ச்சியுற்ற நாடுகளில் முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவம் வெகுவாக உணரப்பட்டுள்ளது. அதனால் தான் அந்நாட்டு அரசாங்கங்கள் அதற்கு பெருமளவு அனுசரணை வழங்கி ஆதரிக்கின்றன. ஒன்று தொடக்கம் ஐந்து வரையிலான காலப்பகுதி பிள்ளையின் அறிவு வளர்ச்சியில் மிக முக்கியமான காலகட்டமாகும். அக்காலப் பகுதியில் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்காகவும், சமூக வளர்ச்சிக்காகவும் பல்வேறு செயற்பாடுகளில் விளையாட்டுக்களிலும் ஈடுபடுத்துவது அவசியமாகின்றது. மேலும் வாசித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக தசைநார் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். அத்தோடு பாடசாலை அனுமதியின் போது பிள்ளை அதனை ஏற்றுக் கொள்ளக் கூடிய மனோநிலையை ஏற்படுத்துவதற்கும் முன்பள்ளிக் கல்வி துணை புரிகின்றது. இந்த வகையில் எமது அரசாங்கம் முன்பள்ளிக் கல்வியின்பால் தனது கவனத்தைத் திருப்பியுள்ளது. மாகாண அரசுகளும் இதனை ஊக்குவிப்பதற்கான நடைமுறைகளை மேற்கொள்கின்றன. உள்ளூர் ஆட்சி சபைகள் சில முன்பள்ளிகளை நடாத்துகின்றன. ஆனாலும் தனியார்களின் முன்பள்ளிகளே அதிகமாக காணப்படுகின்றன.

இந்த வகையில் அனைத்துப் பிள்ளைகளும் முன்பள்ளிகளுக்குச் செல்வது அவசியமாகும். இதில்காணப்படும்பிரச்சினைஎன்னவென்றால்முன்பள்ளிக்கல்விபற்றிபெற்றோர்கள்கொண்டிருக்கின்ற புரிதலேயாகும். முன்பள்ளிகளுக்குச் செல்லும் தங்கள் பிள்ளைகள் சரளமாக எழுதவும், வாசிக்கவும், ஆரம்பகணித, மொழி அறிவில் திறமைபெறவேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார்கள். பணம் சம்பாதிக்கும் நோக்கில் முன்பள்ளிகளை நடாத்தும் தனியார் சிலரும் அதனை ஊக்குவிக்கின்றனர். மண் போன்றவற்றோடு விளையாடுவதையும் பெற்றோர்கள் விரும்புவதில்லை. **"வளரும் பயிரை முளையிலே தெரியும் வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்"** என்ற முது மொழியை இலகுவாக மறந்து விடுகின்றார்கள்.

உரிய முதிர்ச்சிக்கு முன், பிள்ளைகளை ஏதாவது செயற்பாட்டில் ஈடுபடுத்தினால் அது பிள்ளையின் வளர்ச்சிக்குப் பதிலாக பின்னடைவையே ஏற்படுத்தும் என்பது உளவியலாளர்களின் கருத்தாகும். முன்பள்ளிப் பருவம் என்பது முறைசார் கல்விக்கான முயற்சிகளைப் பெறும் பருவமாகும் இதற்கான பயிற்சிகளை வழங்கும் நிலையங்களே முன்பள்ளிகளாகும். பெற்றோர்கள் முன்பள்ளிப் பருவக்கல்வியின் தத்துவத்தை உணர்ந்து பிள்ளைகளை உரிய வழியில் நடாத்தி அவர்களின் வளர்சிசிக்கு உறுதுணையாக செயற்பட வேண்டியது அவசியம்.

**திருமதி. சுகுணா சந்திரகுமார் – ஆசிரியை**

# இலங்கையைப் பற்றி நான் அறிந்தவை

1. இலங்கைத் தீவின் புராதான குடிமக்கள் யார்?

   *இயக்கர், நாகர்*

2. இலங்கையின் ஆதி மொழி யாது?

   *எலு*

3. விஜயன் வருகைக்கு முன்னர் இலங்கையில் இருந்த நாக அரசுக்கள் எவை?

   *நாகதீவு, கல்யாணி, மகியங்கனை*

4. இலங்கையின் முதல் மன்னனாகக் கொள்ளப்படுபவன் யார்?

   *விஜயன்*

5. விஜயனும் அவனது தோழர்களும் வந்திறங்கிய பிரதேசம் எப் பெயரால் அழைக்கப்படும்?


   *தாமிரபரன் (தம்பபன்னை)*

6. பௌத்த மதத்தை இலங்கைக்கு கொண்டு வந்தவர்கள் யாவர்?

   *மகிந்தன்,சங்கமித்தை*

7. இலங்கைத் தீவின் வரலாற்றினைக் கூறும் பாளி வரலாற்று நூல்கள் மூன்றினைத் தருக?

   *தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம்*




8. மகாவம்சத்தின் ஆசிரியர் யார்?

   *மகாநாமதேவர்*

9. இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் ஏனைய சாதனங்கள் எவை?

   *கல்வெட்டுக்கள் (கல்பொறித்த) ஆதிப்பிராமிச் சாதனங்கள், நாணயங்கள், மண்டபம்*


10. எம் மன்னனுடைய காலத்தில் பௌத்தம் இலங்கைக்கு வந்தது?


    *தேவநம்பியதீசன்*

**த.திலக்ஷன் – தரம் – 3A**

## மலேசியாவில் நடைபெற்ற தனித் தமிழியக்க மாநாட்டில் வெளியிடப்பட்ட நுட்பவியல் கலைச்சொற்கள்

- WhatsApp - புலனம்
- Youtube - வலையொளி
- Instagram - படவரி
- WeChat - அளாவி
- Messenger - பற்றியம்
- Twitter - தொலைவரி
- Skype - காயலை
- Bluetooth - ஊடலை
- Wifi - அருகலை
- Hotspot - பகிரலை
- Broadband - ஆலலை
- Online - இயங்கலை
- Offline - முடக்கலை
- Thumbdrive - விரலி
- Hard disk - வன்தட்டு
- GPS - தடங்காட்டி
- cctv - மறைகாணி
- OCR - எழுத்துணரி





- LED - ஒளிர்விமுனை
- 3D - முத்திரட்சி
- 2D - இருதிரட்சி
- Projector - ஒளிவீச்சி
- Printer - அச்சுப்பொறி
- Scanner - வருடி
- Smart phone - திறன்பேசி
- Simcard - செறிவட்டை
- Charger - மின்னூக்கி
- Digital - எண்மின்
- Cyber - மின்வெளி
- Router - திசைவி
- Selfie - தம்படம், சுயஉரு
- Thumbnail - சிறுபடம்
- Meme - போன்மி
- Print screen - திரைப்பிடிப்பு
- Inkjet - மைவீச்சு
- Laser - சீரொளி

நன்றி
இணையத்தேடல்
உ. அனுருத்தன்
தரம் –4B

# இன்றைய சிறுவர்களை நம்பிக்கையுடன் நாளைய உலகிற்கு இட்டுச் செல்வோம்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் மட்டுமல்ல. அனைத்துத் துறைகளிலும் கால்பதித்து நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் நாயகர்களும் அவர்களே. அத்தகையவர்களை நம்பிக்கையுடன் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டிய பாரிய பொறுப்பும், கடப்பாடும் பெரியோர்களாகிய எம்மையே சாரும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

ஆம் இன்று நாம் சிறுவர்கள் எனக் கூறுவது ஒன்று தொடக்கம் பதினெட்டு வயதுக்குள் அடங்கும் இளைய சந்ததியினரையே ஆகும். இவர்களது இப்பருவமானது பெற்றாருடனும் பாடசாலைக் கல்வி பயிலும் காலம் வரை ஆசிரியர்களுடனும் கழிகின்றது. இப்பருவம் வாழ்வின் முக்கிய பருவமாகும். இப்பருவத்தில் இவர்களைச் சரியான முறையிலும் சிறந்த வழியிலும் வளர்த்தெடுப்பதன் மூலமே அவர்களின் எதிர்காலத்தையும் அடுத்துவரும் பருவங்களையும் சிறப்பாக அமைத்துக் கொள்ள ஏதுவாயிருக்கும்.

எனவே அவர்களை முன்னேற்றப் பாதையில் சரியான முறையில் இட்டுச் செல்ல வேண்டிய கடப்பாடு பெற்றவர்களுக்கும், பெரியவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உரியதாகும். அவர்கள் சிறுவர்களுக்கு வழிகாட்டுவது வெறும் போதனை மூலம் மட்டுமன்று சாதனைகள் மூலமும் நடத்திக் காட்டுதல் வேண்டும். அவர்கள் முன்னிலையில் நாம் நடந்துகொள்ளும் முறையிலேதான் சிறுவர்களது பண்புகளும் நடத்தை மாற்றங்களும் ஆற்றுப்படுத்தப் படுகின்றன.

இவ்வகையில் சிறுவர்களின் முதல் ஆசான்கள் தாயும் தந்தையுமே ஆவர். பிள்ளைகள் மீது மிகக்கூடிய செல்வாக்கினைச் செலுத்தும் பங்கு அவர்களையே சாரும். தாய் என்ற வகையில் பெற்றவள் தன் கருவில் சுமக்கத் தொடங்கி காடு செல்லும் காலம் வரையிலும் பிள்ளைக ளுக்கு நல்லதொரு வழிகாட்டியாகவும் விளங்கவேண்டும். உணவு, உடை முதலான தேவைகளை நல்குவதுடன் அவர்களின் கடமை முடிந்து விடுவதில்லை. போதிய அன்பும், அரவணைப்பும், நல்லசிந்தனையும், பழக்கவழக்கங்களும் தாயிடமிருந்தே பிள்ளைகற்றுக் கொள்கின்றது. அவையே பின்னாளில் பிள்ளையின் வாழ்வில் செல்வாக்கு செலுத்தும். இதனாலேயே **"தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை"** என்று கூறினர் ஆன்றோர்.

இவ்வாறே தந்தையரும் தம்பிள்ளையின் வளர்ப்பில் முக்கிய பங்கினை வகிக்கின்றனர். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் அவர்களது நற்குண நன்னடத்தைகளால் பிள்ளைகளை நல்வழிப்படுத்தி சமூகத்தில் சான்றோன் ஆக்குவதில் தந்தையின் பங்களிப்பு அளப்பரியதா-கும். பிள்ளையின் ஞானகுருவாக விளங்க வேண்டியவரும் தந்தையே. இதனாலன்றோ சான்றோ னாக்குதல் தந்தையின் கடனே எனப் புலவர்களும் புகழ்ந்து சென்றுள்ளனர்.

பெற்றோர்களை எங்கள் தமிழ்மொழியும் இருமுதுகுரவர் என எழிலாகக் கூறி சிறுவர்களை வழி நடத்துவதில் தாய் தந்தையரும் ஆசிரியர்களே என வலியுறுத்துகின்றது.

இவ்வாறே பிள்ளைகளின் உற்றார், உறவினர், அயலவர்கள், பெரியார்கள் என அனைத்துத் தரப்பினரும் சிறார்களை ஒரே முகமாய்ப் பேணி இன்சொல் பேசி தமது நன்னடத்தைகளால் அவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழவேண்டும்.

இவ்வகையில் சிறுவர்களின் அறிவு, நடத்தை, மனப்பாங்குகளை மேலும் சிறப்புற வழி காட்டுபவர்களே ஆசிரியர்கள் ஆவர். வீட்டிலே ஓரிருவராய் இருக்கும் சிறுவர்களை ஒரு பெருந்தொகையினராய் ஒன்று சேர்த்து அவர்களிடையே அன்பு, ஒற்றுமை, புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, உதவிசெய்யும் மனப்பாங்கு, கடமையுணர்வு, கண்ணியம், கட்டுப்பாடு, முதலிய நல்லொழுக்கங்களை மேலும் வளர்ப்பதுடன் எழுத்தறிவு, எண்ணறிவு உட்பட கல்வியறிவையும் விளையாட்டு, பேச்சு, பாடல் ஆடல் முதல் பல திறன்களையும் வளர்ப்பதன் மூலம் சிறுவர்களை எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக உருவாக்க முடியும்.

எனவே தாய், தந்தையர், பெற்றோர், உற்றார் உறவினர்கள், ஆசிரியர்கள் ஆகிய நாம் நம்பிக்கையுடனும் நல்லெண்ணத்துடனும் சிறுவர்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றால், வாழ்வும் வளம்பெறும் நாடும் நலம்பெறும்.

**திருமதி பவானி சின்னத்தம்பி – ஆசிரியை**

# எனது எதிர்கால இலட்சியம்



எனது எதிர்கால இலட்சியம் ஒரு வைத்தியராக வருவதாகும். நான் இந்தத் துறையை தேர்ந்தெடுத்ததற்கு காரணம் தற்கால உலகில் பல கொடிய நோய்கள் பரவி வருவது யாவரும் அறிந்ததே. அந்த நோய்களுக்குட்பட்ட செல்வந்தர்கள் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து தங்களின் உயிரை காப்பாற்றி விடுகிறார்கள்.

அதே வேளை ஏழைகள் இவ்வாறு நோய்களால் பாதிக்கப்படுகின்ற போது அவர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள போதுமான பணம் அவர்களிடம் இல்லாததால் அவர்கள் தங்கள் உயிரை இழக்க வேண்டிய பரிதாப நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது.

ஆகவே தான் நான் நன்றாகப் படித்து ஒரு வைத்தியராகி ஏழை, எளிய மக்களுக்கு இலவச வைத்திய சேவையினை செய்வதன் மூலம் சமுகத்திற்கு பணி ஆற்றுவதே எனது விருப்பமாகும்.

**தே. டிலுக்ஷிகா**
**தரம் 4B**

# தாய் அன்பை தேடி.....



அன்னை என்று எமக்கு
அடையாளம் காட்டியவள்
தந்தை என்று தரணியில்
சொல்லிக் கொடுத்தவள் நீ!

அன்பை எமக்குத் தருவாய்
ஆசை முத்தம் தருவாய்
பசியைப் போக்க -
பார்த்திருப்பாய்
உருசியாய் ஆக்கி - அளித்திடுவாய்

சுகமாய்
வாழ்ந்தோம். வாழ்க்கை
சுமைதனைக் கண்டோம்
சுழலும்
வாழ்வில் - நாம்
சூழ் நிலைக் கைதியானோம்

நுண்கடனால் - நீ
நூர்ந்து போனாய்
நுண்கடனை விட கொடியது உம் பிரிவு
நூலானது எம் வாழ்க்கையம்மா!

வாழ்க்கைச் சுமையை நீ தாங்கி
வாழ வைக்க வழிதேடி

கல்விக் கடலை நாம் கடக்க - நீ
கரை தேட கடல் கடந்தாய் - நாம்
கரை சேரா ஓடங்களானோம்.

உற்றார் உறவினர் வாழ வைப்பார் - என
நீ எண்ணி எமைப் பிரிந்தாய் - உன்
உழைப்பை உற்றார் உறுஞ்சுவதை - நாம்
எப்படிச் சொல்வோமம்மா.

உற்றாரின் உறவை இழந்து
உண்மை அன்பைத் தேடி
உன்னைத் தேடி நாமும்
உலகினிலே உலவுகின்றோம் அம்மா

தாயைப் பிரிந்த குஞ்சுகளும்
தரணியில் வாழ்வது கடினமம்மா
தாயைப் பிரிந்த நாமும்
உம்மைத் தேடி அலைகின்றோம் அம்மா

அப்பா அவுஸ்ரேலியாப் படகில்
அம்மா அரபிக் நாட்டில்
நாமோ அடுத்தவர் வீட்டில்
தருமோ கல்வியே விடியலை!

**திருமதி மரியஸ்ரெலா தயாளகுணதாஸ்**
**ஆசிரியை**

# பள்ளி


பள்ளி என்ற கலைக் கூடம் – நம்
வாழ்வைச் சிறப்பிக்கும் அன்றாடம்
சிற்பமாய் நம்மை செதுக்கும்
கேள்வி கேட்கும் ஞானம் – அங்கு
பதிலைக் கொடுக்கத் தோன்றும்
வேற்றுமை அகற்றும் பந்தம் – நம்
ஒற்றுமை ஒன்றே சொந்தம்.

**கோ.தர்ஷனிஜன்**
**தரம் 5B**

*என்னை ஒரு ஆசிரியராக உருவாக்கும் இறைவனின் திட்டத்திற்கு கருவிகளாய்ப் பயன்பட்ட ஆசான்களுக்கும், இன்றும் அர்ப்பணிப்போடு கடமையாற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் இக் கவிதையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.*

# இனிய நினைவுகள்

அறியாமை இருளை அகற்றும்
அறிவொளியதனை
அள்ளி அள்ளிக் கொடுக்கும்
அட்சய பாத்திரங்கள்..!




நாள் தோறும் செதுக்கி
நல்லதோர் வடிவத்தை
நான் ஏற்றிட
நலிந்து உழைத்திடும்
சிற்பிகள்!

பட்டை தீட்டியும்
பக்குவமாய் புடமிட்டும்
பார் போற்றி நான் ஜொலிக்க
பண்படுத்துவோர்.!

உனது வெற்றியே
எனது வெற்றியென்று
எனது வெற்றிகாண எங்கிருந்தோ
எனக்காய் துடிக்கும் இதயங்கள்!
எதுவாய் நான் அமைந்திடனும்
என்றெண்ணும்
என்னுள்ள ஏக்கத்திற்கு
ஏதுக்கள் நீங்கள்.!

வழிகாட்ட தீபம் ஏற்றிவிட ஏணி
கரை சேர்க்க தோணி - எனக்காய்
நீங்கள் ஏற்கும் தோற்றங்கள்
தான்
எத்தனை..! எத்தனை..!!

தங்கள் இனிய நினைவுகளை
இதயத்தில் வைத்து
இதமாய்ச் சுமந்து
சுவாசித்துக் கொண்டிருக்கும் - இவள்

**செ. வாணிஸ்ரீ**
**ஆசிரியை**

## ஔடதப் பானங்களின் மகத்துவம்

**பொன்னாவரைப் பூ பானம்**

குருதியில் வெல்லம் (சீனி) மட்டத்தை குறைப்பதோடு தோலிற்கு அழகு கிடைக்கும்.

**நன்னாரி வேர் பானம்**

சிறு நீர், இரத்தத்தைச் சுத்திகரிக்கின்றது. மற்றும் தாய்மார்களின் தாய்ப்பால் சுரப்பையும் கூட்டுகின்றது.

**வில்வம் பூ பானம்**

உடலில் இருக்கின்ற வாத நோவுகளை குறைப்பதோடு உணவுசமிபாட்டையும் கூட்டுகின்றது.

**அ.பேரட்சயன்**
**3B**

# கழுதையும் விவசாயியும்.



ஒரு நாள் ஒரு விவசாயி ஒரு கழுதையுடன் சென்று கொண்டிருந்தார். அந்தக் கழுதை திடீரென ஒரு குழிக்குள் விழுந்து விட்டது. கழுதை குழியில் இருந்து வெளியே வரமுடியாததால் அதிகமாக சத்தமிட்டுக் கத்திக் கொண்டிருந்தது.விவசாயி கழுதையை வெளியே எடுப்பதற்கு அதிக முயற்சி எடுத்தார். ஆனால் கழுதையை வெளியே எடுக்க முடியவில்லை.

அவ்வேளையில் அவருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அதாவது **"நமது இந்தக் கழுதை மிகவும் வயது போனது. இதனை அப்படியே குழியில் வைத்தே மூடிவிடலாம்"** என்று உடனே அவர் தமது நண்பர்களை அழைத்து குழியைச் சுற்றியுள்ள மண்ணை அள்ளிக் குழிக்குள் போடுமாறு கூறினார். இப்படி அவர்கள் மண்ணைக் குழிக்குள் போட ஆரம்பித்தார்கள். இவ் வேளையில் அக் கழுதை பயத்தினால் இன்னும் அதிகமாக கத்தியது. ஆனால் சிறிது நேரத்தில் அது கத்தியதை நிறுத்தியது. விவசாயி குழியை எட்டிப் பார்த்தார். அப்போது அவர் அதிசயித்துப் போனார் ஏன் என்றால் கழுதை மீது விழும் மண்ணை அது உதறிவிட்டதுடன் மண் உயர உயர மண் மேல் அது ஏறி ஏறி நின்றுகொண்டிருந்தது. அப்படியே தொடர்ந்து முயற்சி செய்து கடைசியில் கழுதை குழியை விட்டு வெளியே உயிருடன் தப்பித்துக் கொண்டது.அதன் முயற்சியைக் கண்டு விவசாயியும் மனம் மாறியதுடன் முன்பை விட கழுதை மீது அதிக அன்பாகவும் நடந்து கொண்டார்.

***கதையின் மூலம் நாம் பெறும் படிப்பினை***

***"நாம் எமக்கு ஏற்படும் தடைகளைக் கண்டு பயம் கொள்ளாது தடைகளை படிக்கற்களாக பயன்படுத்தி முன்னேற வேண்டும்"***

**ஜெ.மேரி டனிற்றா**
**தரம் 3A**

# ஒன்றுக் கொன்று எதிரான உணவுகள்

- ★ பாலுடன் வத்தகை (தார்பூசணி)
- ★ சம அளவு நெய்யும் தேனும்
- ★ தயிருடன் பன்றி இறைச்சி
- ★ தயிருடன் பலாப்பழம்.
- ★ மரவள்ளிக் கிழங்கும் இஞ்சியும்.
- ★ ஒன்றுடன் ஒன்று சேரும் போது ஒவ்வாத குணவியல்புகளான வாந்தி, அஜீரணம் போன்ற நோய்கள் ஏற்படக் கூடும்.

**பி.மிருட்சிகா – 3B**

# சிறுநீரகக் கற்கள் அகற்றும் மூலிகைகள்

1. தேங்காய்ப்பூக் கீரை
2. சிறு நெரிஞ்சி
3. தொட்டாச் சுருங்கி

*இவை மூன்றையும் சம அளவாக வேருடனும், முட்களுடனும் பிடுங்கி எடுத்து நீரினால் சுத்தம் செய்து சிறு துண்டுகளாக வெட்டி மண் சட்டியில் தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து கொதித்தாறிய பின் 20 ml அளவில் சாப்பாட்டிற்கு முன் மூன்று நேரம் பருகி வர நோய் குணமாகும் அறிகுறி தென்படும்.*

**பி.சனுசிகா – 5B**

# உலகின் சிறந்த கண்டுபிடிப்புகளும் கண்டுபிடிப்பாளர்களும்

| | |
|---|---|
| 1. மோட்டார் சைக்கிள் | - ஜி. டிம்லர் |
| 2. மைக்ரோஸ்சோப் | - ண. ஜனிசின் |
| 3. மைக்ரோபோன் | - அலைக்சாண்டர் கிரஹம்பெல் |
| 4. தீப்பெட்டி | - ஜேன் வோக்கர் |
| 5. வரைபடம் | - சுமேரியர் |
| 6. ஒலிபெருக்கி | - ஹொரஸ் சோர்ட் |
| 7. புகையிரதம் | - ரிச்சட் ட்ரவ்திக் |
| 8. ஹெலி கொப்டர் | - இட்டனி ஓம்சன் |
| 9. திசைகாட்டி | - இல்மர் ஸ்லெரி |
| 10. கண்ணாடிக் குவளை | - மொசபெத்தேமியா |
| 11. கல்வனா மீற்றர் | - மாரி எம்பயர் |
| 12. திரைப்பட இசை | - D. பொரஸ்ட் |
| 13. ஊற்றுமைப் பேனா | - லூவிஸ் ஈ வோடர்மன் |
| 14. கடிகாரம் | - கிரிஸ்டியன் ஹைஸென்ஸ் |
| 15. சீமெந்து | - ஜேசப் எஸ்ப்டின் |
| 16. எக்ஸ்ரே (X-Ray) | - டப். கே. ரொய்டன் |
| 17. சேப்டி பின் (Safty pin) | - வோல்ட்டர் ஹண்ட் |
| 18. குளிர்சாதனப் பெட்டி | - ஜே.ஹரிசன், ஏ.கெத்லின் |

**சு.கவிவர்த்தனா**
**தரம் 4B**

# நகைச் சுவை துணுக்குகள்

- மாணவன் : செய்யாத தப்புக்கு நீங்கள் தண்டனை தருவீங்களா சேர்?
  ஆசிரியர் : தரமாட்டேன். ஏன்?
  மாணவன் : நான் Home Work செய்யல்ல சேர்!

- ஆசிரியர் : நான் தினமும் 7Km நடந்து சென்று படித்து வந்தேன்
  மாணவன் : அப்பவே உங்களுக்கும் படிப்பிற்கும் ரொம்ப தூரமா சேர்?

- டாக்டர் : நீங்க இவரை ஒரு மணி நேரம் முன்னாடிக் கொண்டு வந்திருந்தா காப்பாற்றிருக்கலாம். நோயாளியின் உறவினர்: அதற்கு என்ன செய்ய? இவங்களுக்கு அக்ஸிடன் நடந்து கால் மணி நேரம் தானே ஆச்சு.

**ஹ.ஹன்யா**
**தரம் 4B**

# பிராணிகள் பற்றிய விடுகதைகள்

1. அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணனுக்கு அங்கம் முழுவதும் தங்கக் கண்ணாடி.
2. போவான் வருவான் கறுத்தப்பன். தலைகீழாய் நிற்பான் கறுத்தப்பன்.
3. பிறக்கும் போது வாலுண்டு. இறக்கும் போது வாலில்லை.
4. மரத்துக்கு மரம் தாவுவான் குரங்குமல்ல, பட்டை அடித்திருப்பான் சுவாமியுமல்ல.
5. ஒற்றைக்கால் நாராயணன் ஓடையில் மீன் பிடிக்கின்றான்.
6. தண்ணீரில்லா தடாகத்தில் தாவிப் பாயுது ஒரு கப்பல்.
7. படுத்துறங்காத மிருகம் பந்தயத்தில் ஓட்டம் அதிகம்.
8. உண்டதை நினைப்பான் உதையை மறப்பான் உயிரையும் கொடுப்பான்.
9. கொண்டை உச்சியில் பூ உண்டு எடுக்க ஆளில்லை. காலில் முள்ளுண்டு எடுக்க யாருமில்லை.
10. கருமை நிறத்தழகி காடெங்கும் சுற்றிடுவாள் கண்டவுடன் ஓடுகிறாள் கான மழை பொழிகிறாள்.

## விடைகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 8. நாய் | 5. கொக்கு | 10.குயில் | 1. மயில் | 7. குதிரை |
| 3. தவளை | 2.வௌவால் | 4. அணில் | 6. ஒட்டகம் | 9.சேவல் |

**உ.அதுஸ்ரதி**
**தரம் – 5A**

# அன்புள்ள அம்மாவுக்கு உங்கள் பாசமிகு அன்பு மகளின் மடல்..

ஏதோ உங்களதும் இறைவனதும் ஆசியால் தொடர்ந்து படிக்கின்றேன். உங்களது அன்பான அழைப்பு நீண்ட நாட்களாக கிடைக்காமையால் ஏக்கத்துடன் இம் மடலை வரைகின்றேன்.


அம்மாவின் மடியில் நானறியாப் பருவத்தில் பாலமுது அருந்தியதாகவும் பின்னர் என்னை விட்டு வெளிநாடு சென்றதாக பாட்டி அடிக்கடி கூறுவார். அம்மா உங்களது ஆசை முத்தமோ, தாலாட்டுப் பாடலோ, அமுதூட்டும் இன்பமோ, கனிவான பேச்சோ எனக்குக் கிடைக்கவில்லை. நான் வளர்ந்து ஐந்தாம் வகுப்பு பொதுப் பரீட்சையும் எழுதிவிட்டேன் அதில் சித்தியும் அடைந்து விட்டேன. எனது புகழ்ச்சியை வெளியீடுவதற்கு உன்னை ஆரத்தடவி கட்டியணைத்து எனது இன்பதுன்பங்களை சொல்லி மனமுருக இவ் வேளையில் நீ இல்லையே..! என எனது மனம் இறுக்கமடைகின்றது. பாடசாலை கதவருகே என் சக தோழிகளை அவர்களது அம்மாமார் கட்டியணைத்து உச்சிமோர்ந் அழைத்துச் செல்லும் போது எனது மனம் சொல்லொண்ணா துயரடைகின்றது.

அம்மா, எனது அன்பான ஆசிரியரும், எனது வகுப்பாசிரியரும், அன்பான அதிபரும் எனது மனதுக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கூறி என்னைக் கல்வியில் வளர்ச்சியடைய வைத்துள்ளார்கள். கண் தெரியாத பாட்டி பசியாற அன்னமும், இரட்டை ஜடை பின்னியும் ஏதோ பள்ளிக்கு என்னை அனுப்புகிறார். என்னை ஏற்றி இறக்க ஆட்டோ மாமா இவர் தான் எனது தகவலைக் காவிச் செல்லும் தபாற்காரரும் கூட. இதை யாரிடம் சொல்லி நான் அழ..? கேட்டால் மகளே நீ பெண் பிள்ளை உனக்கு சொத்து சேர்க்க, வீடு கட்ட, காசு உழைக்கச் சென்றிருப்பதாக கூறுகிறார். அப்பாவிடம் கூறுவோமென்றால் அவரும் அகால மரணம். நான் கண்ணிருந்தும் குருடியாய், காது இருந்தும் செவிடாய், வாயிருந்தும் ஊமையாய் எனது சோகத்தை என் மனதிலே புதைத்து அழுகின்றேன். நீ வெளிநாட்டில் படும் அவஸ்த்தை எனக்கு தெரியாதொன்றல்ல. உனது அன்புக்காக ஏங்குகின்றேன் அம்மா. சிறு பருவத்தில் கிடைக்காத பாசம், அன்பு நான் வளர்ந்த பின் கிடைத்துத்தான் என்ன பயன்..?

இப்படியெல்லாம் எழுதுகின்றேன் இவ பெரிய மனிசியா என நீங்கள் நினைக்கலாம். இவை காலம் கற்றுத் தந்த பாடங்கள் அம்மா. இந்த ரணங்கள், வடுக்கள் தீர நான் இறைவனை எந்நாளும் பிரார்த்திக்கிறேன். எனது சோகத்தை இம்மடல் மூலமாக கொட்டித் தீர்த்துவிட்டேன். எனக்கு ஓரளவு திருப்தி. உங்களுக்கு.? இத்துடன் முடிக்கின்றேன்.

**அன்புள்ள மகள்**
**ஜெ.அக்ஷாயினி**
**தரம் 5A**

# விபுலானந்தரை போற்றிடுவோம்



காரை நகரில் பிறந்தவராம்
கவிதை நன்றாய்த் தந்தவராம்
முத்தமிழ் வித்துவம்
கொண்டவராம்
முழங்கிடும் தமிழ் மணம்
மிக்கவராம்

ஆங்கிலப் புலமை
கொண்டவராம்
அத்துடன் வடமொழி தந்தவராம்
அறிவியல் தேர்ச்சி கொண்டவராம்
அகிலம் போற்றும் உத்தமராம்

பாடசாலைகள் பல செய்து
பலரும் கல்வி பெறச் செய்தவராம்
ஏழைகளும் நல் வாழ்வு பெற
இனிய பணிகள் புரிந்தவராம்

உலகம் போற்றும் யாழ்
நூலும்
உயரிய மதங்க
சூளாமணியும்
என்றும் எங்கள் செல்வமென
எழுதி எமக்குத் தந்தவராம்
இந்து மதத்தின்
பெருமையையும்
எங்கள் தமிழின்
அருமையையும்
எடுத்து விரித்து புகன்றவராம்
என்றும் நிலைத்து
நிற்பவராம்

தமிழர் நாங்கள் தலை நிமிர
தன்னையே முற்றும்
அர்ப்பணித்த
விபுலானந்தரைப்
போற்றிடுவோம்
விளங்க அவர் புகழ் காத்திடுவோம்.

**நி.ஹேமிஷானியா – தரம் 5A**

# பள்ளிக்கூடம் போகலாமா

பள்ளிக் கூடம் போகலாமே
சின்ன பாப்பா –நிறைய
பிள்ளைக ளோட பழகலாமே
சின்ன பாப்பா!

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
சின்ன பாப்பா –கல்வித்
தோட்டம் அந்த பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் திறந்தாச்சி
சின்ன பாப்பா –உனக்கு
நல்ல நேரம் பிறந்தாச்சி
சின்ன பாப்பா!

வீட்டுச் செய்தி கதைகள் பேசி
பொழுது போக்கலாம் –அட
ஏட்டுக் கல்வி பாடம் கூட
எழுதிப் பார்க்கலாம்!

உடலும் மனமும் வளர்வதற்கு
சின்ன பாப்பா –ஏற்ற
இடமே இந்தப் பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் போகலாம் வா
சின்ன பாப்பா –நிறைய
பிள்ளைகளோட பழகலாம் வா
சின்ன பாப்பா!

**ர. கிசோரிக்கா**
**தரம் 5B**

# சிறுவர் விளையாட்டுக்கள்



உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஆரோக்கியமான பிரஜைகளைக் கொண்ட சமூகத்தை கட்டியெழுப்ப முயற்சிப்பதே தேசத்தின் தற்காலப் பணியாகும். அந்த வகையில் சிறுவர் விளையாட்டுக்களும் முக்கிய இடம் பெறுகின்றது.

தற்கால கலைத்திட்டத்திற்கமைய பாடசாலை காலத்தில் நாளொன்றுக்கு 25 நிமிட நேர வீதம் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. காலை ஒன்றுகூடலின் பின் இச் செயற்பாடு செயற்படுத்தப்படுகிறது. அத்தோடு பாடசாலை சிறுவர் விளையாட்டுப் போட்டிகளின் போது குழு விளையாட்டுக்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் நோக்கம் யாதெனில் தேசத்தின் உற்பத்தியில் தோள்கொடுக்கக்கூடிய உள சமநிலையைக் கொண்ட சிறந்த உடல் நலத்தையுடைய ஒரு சந்ததிக்குத் தேவையான ஒற்றுமை, கீழ்ப்படிவு, கட்டுப்பாடு, மகிழ்வூட்டுதல், துணிவு, பொறுப்புணர்ச்சி, விடாமுயற்சி, உறுப்பு வளர்ச்சி, உடல் தயார் நிலை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை போன்ற அடிப்படை அனுபவங்களை பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

மேலும் சிறார்களின் உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமன்றி உள ஆரோக்கியத்திற்கும் உதவக்கூடிய வகையில் இவ்விளையாட்டுக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பாடசாலையில் உள்ள வளங்களுக்கமைவாக இசை ஒலிகளுக்கேற்ப தாள லயத்துடன் இச்செயற்பாடுகளைச் செய்வதன் மூலம் சிறார்களை களைப்படையச் செய்யாது மாறாக உடலுள புத்துணர்ச்சியையும் இரசனையையும் ஏற்படுத்தும் செயற்பாடாக இவை அமைகின்றன. இது போன்று உடற் செயற் பாடுகளை திட்டமிடும் போது வயதெல்லை, பால் வேறுபாடு விருப்புக்கள், ஆசைகள், உடல் நிலைகள், உள நிலைகள், உடற்குறைபாடுகள் ஆகிய அம்சங்கள் பற்றிக் கவனமாய் இருப்பது அவசியமாகின்றது.

***ஆகவே ஆசிரியர்கள் அனைவரும் மேற்கூறிய விடயங்களை கருத்திற்கொண்டு புதிய உலகிற்கு முகம் கொடுக்கக்கூடிய நல்லதொரு சமுதாயத்தை கட்டியெழுப்ப உறுதி பூணுவோம்.***

**திருமதி.நேசமலர் ராஜகுமார்**
**ஆசிரியை**

# ஆசிரியர் தொழில் வாண்மைத்துவம்?

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப் படுத்தக்கூடியதாகவும் உள்ளது. கல்வி என்பது தனியாள் விருத்திக்கு அடிப்படையாக அமைகின்றது. இன்றைய நவீன காலத்திற்கேற்ப மனிதன் கல்வியை கற்கும் ஆற்றலில் உச்சநிலையில் உள்ளான். அந்தவகையில் இப்பணியை சிறப்பாக நிறைவேற்றும் பொறுப்பு நிறைந்தவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகின்றார்கள்.

ஒவ்வொரு நாடும் அறிவாற்றலினை அடிப்படையாகக் கொண்டு தேவையற்ற விடயங்களைக் களைந்து தேவையான விடயங்களை புகுத்தி பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை கல்வி தொடர்பாக முன்னெடுத்துச் சென்று புத்தாக்கங்களுடன் உலகம் மிளிர்வதற்கு செயற்படுகின்றது. இச்சிக்கல் நிறைந்த பணியை நிறைவு செய்வதற்குரியவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகின்றார்கள். அந்தவகையில் ஆசிரியர் தொழிலானது வைத்தியத் தொழில் இதாதித்தொழில் போன்று மனிதனோடு ஒன்றிணைந்து வேலை செய்கின்ற தொழிலாகும். இவ்வாறு பணிபுரிபவர்கள் தங்களுடைய தொழில்சார்ந்த வாண்மைத்துவத்தை அதிகரித்துக் கொள்ளவேண்டும்.

இந்தவகையில் ஆசிரியர் வாண்மை விருத்தி என்பது மாணவர்களுக்கான கல்விசார் அடைவுமட்டங்களை வெற்றிகரமானவகையில் உருவாக்கத் தேவைப்படுகின்ற திறன்கள் தேர்ச்சிகளை மேம்படுத்திக்கொள்ளும் செயன்முறையாகும். ஆசிரியர்கள் தாம் மாற்றுமுகவர் என்றவகையில் பொறுப்புக்களை மீள்சிந்தனை செய்யவும், புதுப்பிக்கவும், நிறைவேற்றவும் உதவு-கின்ற செயன்முறையே வாண்மைவிருத்தியாகும். இதன் மூலம் மாணவர்களுக்கு கற்பிப்பதற்குத் தேவையான அறிவு, திறன் ஆகியவற்றைஆசிரியர்கள் பெற்றுக் கொள்ளுகின்றனர்.

மாணவர் மையக்கல்வியில் செயற்படும் இன்றைய ஆசிரியர்கள் ஒரு மாற்று முகவரான வகிபாகத்தை ஏற்று செயற்பட வேண்டும். ஆதலால் ஓர் ஆசிரியர் மாணவர்களின் கல்வித் தேவைக்கேற்ப வாண்மை விருத்தியை பெற்றவராக இருக்க வேண்டும். மாணவர்கள் செயலாற்று நிலையில் அனுபவங்களைப் பெறுவதற்கான செயற்பாடுகள் அதிகம் இடம்பெற கற்றல் செயற்பாடுகளுக்கு முதலிடம் வழங்கி மாணவர்கள் சுயமான அனுபவங்களைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை ஆசிரியர் பெற்றுக் கொடுக்கவேண்டும். மாணவர்களை குழுவாக வழிப்படுத்தி அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்திசெய்தல் வேண்டும். தம்மிடம் கற்கவருகின்ற இளம் சந்ததியினரை கற்றலினூடாக எதிர்காலத்தில் எழுகின்ற பிரச்சினைகள், சவால்களை துணிச்சலாக எதிர் கொண்டு பொறுப்புடையவர்களாக ஆக்குவதற்கு ஆசிரியர்களின் வாண்மை விருத்தி அவசியமாகவுள்ளது. காலத்துக்கு காலம் கல்வி முறையில் முன்னேற்றத்தை கொண்டு வருவதற்காகக் கல்வியானது மறுசீரமைப்புக்கு உட்பட்டுவருகின்றது.

இவ்வாறான மறுசீரமைப்புக்களின் போது பயனுறுதிமிக்க மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை முன்னேற்ற வேண்டியபணி ஆசிரியர்களிடமே உள்ளது.

ஆசிரியர்கள் மாற்றங்களுக்கேற்ப செயற்படுவதற்கு வாண்மைவிருத்தி தொடர்பாக அக்கறைகாட்ட வேண்டிய தேவையுள்ளது. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் கல்வி சீர்திருத்தத்திற்கேற்ப தொழில்சார் விருத்திக்கான பல்வேறு விதப்புரைகள் முன்மொழியப்பட்டுள்ளன. அந்தவகையில் ஆசிரியர் வாண்மை விருத்திப் பயிற்சி இருபெரும் பகுதிகளாக வகுக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

1. **ஆசிரியர் தொழிலுக்குமுன்னர் வழங்கப்படும் பயிற்சி (தொடக்க நிலைபயிற்சி)**
2. **ஆசிரியர் தொழில் சேவையில் இருக்கும் போது வழங்கப்படும் தொழில் வாண்மைப் பயிற்சிகள் ( தொடர்நிலைப் பயிற்சி)**

தேசிய கல்வித் தரத்தினை உயர்த்துவதன் அடிப்படையில் ஆசிரியர்கள் தொழில் வாண்மை விருத்திக்கு பயிற்சிகளைப் பெறுதல் வேண்டும். ஆசிரியர் தொழில் வாண்மை விருத்தி செய்யும் பொருட்டு பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், தேசியகல்விநிறுவகம், தேசியகல்வியற்கல்லூரி, ஆசிரியர் பயிற்சிகலாசாலை, தொடருறுகல்விக்கான ஆசிரியர் கல்வி நிறுவனங்கள், ஆசிரியர் கல்வி மத்திய நிலையம் போன்ற நிறுவனங்கள் மூலம் பயிற்சினைப் பெற்று ஆசிரியர்கள் தமது தொழில் வாண்மையை விருத்தி செய்து கொள்ளமுடியும்.

இன்று பாடசாலைகளில் ஆசிரியர்களின் அபிவிருத்திக்காக நடைமுறைப் படுத்தப்படுகின்ற பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (SBTD) செயற்பாடுகள் மூலம் ஆசிரியர்கள் தமது சுய விருத்திக்கான ஆற்றலைப் பெற பயிற்சியும் சந்தர்ப்பமும் கிடைப்பதுடன் ஆசியர்கள் தமக்கிடையே வாண்மை விருத்தி தொடர்பான கருத்து பரிமாறல்கள் செய்யவும் மாணவர்களின் அடைவு மேம்பாட்டிற்கு சிறந்ததாக அமைகின்றது. இச் செயற்பாடு மூலம் ஆசிரியர்கள் தமது தொழில் வாண்மை பயிற்சிகளைப் பெற வாய்ப்பாகவும் அமைகின்றது. மற்றும் துறைசார் கல்விப் பணிப்பாளர்கள் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆசிரியர்களுக்கு நடாத்தப்படுகின்ற பயிற்சி செயலமர்வுகள் கருத்தரங்குகளும் தொழில் வாண்மைப் பயிற்சிக்கு உதவுகின்றது. மேலும் பாடசாலைக் கணிப்பீட்டு வேலைத்திட்டமான உள்ளக மதிப்பீடு, வளிவாரி மதிப்பீடுகள் ஆசிரியர்களின் தொழில் வாண்மைத்துவ விருத்தியை ஏற்படுத்தும் ஒழுங்கு படுத்தப்பட்ட செயற்பாடாக அமைகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு ஆசிரியர்களும் என்றும் கற்றுக் கொண்டிருப்பவர்களாகவும், நவீன உலகில் ஏற்படும் மாற்றங்கள், சவால்கள், போட்டிகள், என்பவற்றிற்கு முகங்கொடுக்கக் கூடியவர்களாகவும், புதியவற்றை தேடியறியும் ஆவல் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். மிக விரைவாக மாறிவருகின்ற உலகிற்கு ஏற்ப தம்மை இற்றைப்படுத்திக் கொள்ளவேண்டும். தமதுபாடங்கள் தொடர்பான போதியளவு அறிவும், அதனைப் பகிர்ந்துகொள்ளும் சிறந்த மொழியறிவும் தொழில்நுட்ப முறைகளைக் கையாள்பவராகவும் இதொடர்பாடல் திறனுடையவராகவும் தம்மை வளர்ப்பவராகவும் திகழ வேண்டும். வினைத்திறனான பாடசாலைச் செயற்பாடுகளில் அதிபரோடு ஏனைய ஆசிரியர்களோடு ஒத்துழைப்பராகவும் சக ஆசிரியர்களுடன் சிறப்பான தொடர்புகளைக் கொண்டவராகவும் இருக்கவேண்டும்.

மாணவர்களின் சிறந்த ஆலோசகராக தினமும் கற்பிற்கும் விடயங்களை ஆயத்தப்படுத்தி வருபவராகவும் சிறந்த கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்துபவராகவும் நேரமுகாமைத்துவம் பேணுபவராகவும் செயற்படுவதுடன் முன்மாதிரியாகவும் நடந்து கொள்ள வேண்டும். தமது பேச்சு, சொல், செயற்பாடுகள், நடத்தைகள் அணிந்துகொள்ளும் ஆடை , சிகை அலங்காரம், அறநெறி ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடித்தல், அர்ப்பணிப்பு மனப்பாங்கு, கடமைகளைப் பொறுப்பேற்றல், வழங்கப்பட்ட கடமைகள், பொறுப்புக்களை *நேர்த்தியாகவும் சிறப்பாகவும் செய்து முடித்தல், விடுமுறை எடுப்பதை இயன்றவரை குறைத்து* சலுகையாகப்பயன்படுத்துதல்,பாடசாலைசமூகத்துடன்நட்புறவுடன்பழகுதல்,சிறந்தகூட்டுறவைப் பேணுதல், தலைமைத்துவத்தை மதித்தல், போன்ற நல்லாசிரியர் பண்புகளில் தம்மை உட்படுத்தி மாணவர்களின் வினைத்திறனில் சிறந்த விளைவுகளை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நாளைய சந்ததிகளை உருவாக்குகின்றபோது இறைவனின் நல்லாசி நாடிவரும் என்பது திண்ணம்

## உசாத்துணை நூல்கள்:


கற்பித்தல் நுட்பங்கள், இணையத்தளங்கள் திரு. ஆ.செல்வநாயகம் [திருகோணமலை]

கலைத்திட்ட முகாமைத்துவம் திரு.சிவானந்தம் சிறீதரன் [மட்டக்களப்பு]


**திருமதி.கலைவாணி வசந்தகுமார்**
**ஆசிரியை**

## 2018 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவ மணிகள்



உ. அதுர்ஸ்ரதி



நி. ஹேமிசானியா

# வாசிப்பு ஒரு இன்பகரமானது



பண்டைய காலம் தொடக்கம் இன்றைய நவீன காலம் வரை வாசிப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. ஒரு மாணவனின் கல்வி குடும்பச் சூழலிலிருந்து பிறக்கின்றது. இதனால் குழந்தையின் குடும்ப அமைப்பு மிக நன்றாக அமைதல் வேண்டும்.

சிறார்களின் மூளை 6 - 10 வயது வரை மிக வேகமாக வளர்ச்சியடையும் பருவமாகும். வாசிப்பு மிக முக்கியமான திறன்களைக் கொண்ட செயன்முறையாகும். இது சிந்தித்தல், ஆராய்தல், கண்டறிதல், கற்பனை செய்தல், நியாயம் கண்டறிதல் போன்ற திறன்களை உள்ளடக்கிய நூல்களை மகிழ்வான பொழுதுபோக்கிற்காகவும் தகவல்களை அறியவும் வாசிக்க வேண்டும். இதற்கு பாடசாலைகளிலும், வீடுகளிலும் வழிகாட்டப்பட வேண்டும். வாசிப்பை இருவகைப் படுத்தலாம்

1. **பாடம் சார் நூல்களை அல்லது பாட அறிவுக்கான நூல்களை வாசித்தல்.**
2. **மகிழ்வதற்கான கற்றல் அல்லது இரசனை மிக்க நூல்களை வாசித்தல்.**

இதில் பாடம் சார் நூல்களை மாணவர்களின் பாட அறிவினை விருத்தி செய்யும் பரீட்சைகளில் உயர் பெறுபேறுகளைப் பெறுவதை நோக்காகக் கொண்ட இடது பக்க மூளை சார்ந்த வாசிப்பாகும். இதனை ஆங்கிலத்தில் "Nonfiction" எனக் கூறுவர்.

மகிழ்வதற்கான கற்றலில் மாணவர்களின் இலக்கிய இரசனையினை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. இதனை ஆங்கிலத்தில் "Fiction" என்பர். மாணவர்கள் பரீட்சையை மையமாக கொண்டு ஈடுபடுவதால் இரசனை மிக்க நூல்களை வாசிப்பது அரிதாகவே காணப்படுகின்றது. எனவே **"வாசிப்பு ஒரு இன்பகரமான நிகழ்வு"** என்பதை உணர்ந்து கற்க வேண்டிய நல்ல நூல்களைக் கற்பது சாலச் சிறந்தது ஆகும்.

## *வாசிப்புப் பற்றி அறிஞர்களின் கூற்று*

1. நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கித் தந்து என்னைச் சந்திப்பவனே என்தலை சிறந்த நண்பன். - **ஆபிரகாம் லிங்கன்**
2. பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் என கேட்ட போது புத்தகங்கள் வேண்டும் என சற்றும் தயக்கமின்றி கூறினாராம் - **லெனின்**
3. "ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித்தரும் ஆகச் சிறந்த பரிசு ஒரு புத்தகம்தான்" **வின்ஸ்ட் சேர்ச்சில்**
4. "என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள் இங்கே ஒரு புத்தகப்புழு உறங்குகின்றது"- **பொட்ரண்ட்ரஸ்ஸீ**

5. "உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அது போல மனப்பயிற்சிக்கு வாசிப்பு"
**- சிக்மண்ட் பிராய்ட்**

6. "உண்மையான வாசகன் வாசிப்பை முடிப்பதே இல்லை" - **ஆஸ்கார் வைல்ட்**


7. உலக வரைபடத்தில் உள்ள மூலை முடுக்கெல்லாம் செல்ல விரும்புகிறாயா? ஒரு நூலகத்துக்கு செல்ல இவ்வாறு நூலின் மகிமையினையும் வாசிப்பின் முக்கியத்துவத்தையும் நமக்கு நம் ஆன்றோர் விட்டுச் சென்றுள்ளனர்.

**திருமதி. விமலாதேவி ஹரிபிரதாப்– ஆசிரியை**

# அதிகாலைப் பொழுது


காலைச் சூரியன் சிரிக்குது
கண்ணைச் சிமிட்டி பார்க்குது
பறவைக் கூட்டம் பறக்குது

வண்ண மலர்கள் மலருது
பாலர் நாமும் எழுவோம்.
பள்ளி சென்று மகிழ்வோம்.



**சி.ஸோபிதஹர்ஷன்**
**தரம் 4B**

# நாய்க்குட்டி



வள் வள் நாய்க்குட்டி
வெள்ளை நிற நாய்க்குட்டி
அழகான நாய்க்குட்டி
வீட்டைக் காக்கும் நாய்க்குட்டி
திருடனைக் கண்டால் குரைக்கும்
வேட்டையாடும் நாய்க்குட்டி
மோப்ப சக்தி அதிகமாம்
கேட்கும் திறன் அதிகமாம்

பாலை நன்றாக குடித்திடுமாம்
பல நிறங்களில் உள்ளது
சோம்பல் இல்லாத நாய்க்குட்டி
நாம் விரும்பும் நாய்க்குட்டி

**ர.றெஜினா – தரம்– 5A**

# நன்றி நவில்கின்றோம்....



எமது வித்தியாலயமானது கல்குடா கல்வி வலயத்தின் குறுகிய கால இடைவெளியில் ஆரம்பிக்கப்பட்டு அனைவராலும் போற்றப்படும் பாடசாலையாகவும் அனைவரும் விரும்பும் பாடசாலையாகவும் அழகிய பேத்தாழைக் கிராமத்தில் அமைந்து எழில் மிகு கவினுரு பாடசாலையாகவும் சிறப்புற்று விளங்குவது அனைவருக்கும் மட்டில்ல மகிழ்வைத் தருகின்றது.

**மட்/ ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயத்தின்** 8வது பரிசளிப்பு விழாவிற்கு மகுடம் சூட்டி மேலும் சிறப்பிக்கும் வண்ணம் வெளியிடப்படுகின்ற **"காந்தள்"** சஞ்சிகையின் இரண்டாவது மலரினை தொடராக வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இந்தவகையில் இதற்கு அருள் பாலித்த இறைவனை இறைஞ்சி நன்றியைத் தொடர்கின்றேன். இப்பாட சாலையானது தனித்துவமிக்கதாகவும் தகைமைமிக்கதாகவும் திகழ வேண்டுமென அன்று முதல் இன்று வரை சிறந்த ஆலோசனைகளையும் நல்ல பல உதவிகளையும் நல்கிவருகின்ற கிழக்குமா-காண முன்னாள் முதலமைச்சர் **கௌரவ. திரு. சிவநேசதுரை சந்திரகாந்தன்** அவர்களுக்கும் எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந் நிறுவனமானது சாதனைகளையும், சவால்களையும் வென்று இக்கிரா மத்திலிருந்து பல சான்றோர்களும், கல்விமான்களும் உருவாக வேண்டுமென்ற உயரிய எண்ணத்துடன் அயராது உழைப்பதோடல்லாது இந்நூல் வெளியிடுவதற்கும் முழுமூச்சாக நின்று உரிய ஆலோசனைகளையும் ஒத்துழைபபினையும் நலமுற நல்கிக் கொண்டிருக்கும் எமது பாடசாலை அதிபர் திரு. க.கதிர்காமநாதன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இந்நூல் சிறக்க நல்லாசிகளை வழங்கிய மதகுருமார்களுக்கும், இம்மலர் சிறக்க வாழ்த்துரைகளை வழங்கிய கிழக்குமாகாண முன்னாள் முதலமைச்சர், கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர், கல்குடா வலயக் பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவது எனது கடமையாகும். இச்சஞ்சிகை வெளியிடுவதற்கு உதவி புரிந்த நல்லுள்ளங்க ளுக்கும், ஆக்கங்களை தந்துதவிய ஆசிரியர்கள், மாணவர்கள், சரவைப் பார்த்து சரி செய்த இதழாக்கக் குழுவினருக்கும், மனமுவந்த நன்றிகள். கணினி வடிவமைப்பிற்கு உதவி வழங்கிய செல்வி. செ.ஷர்மியா அட்டைப்படம் தயாரித்த **திரு. ச.கஜந்தன் (ரிது பிரின்டர்ஸ்)**, விரைவாக அச்சிட்டு தந்த **வின்பிரின்டர்ஸ்** அவர்களுக்கும் எனது பாடசாலை சமூகம் சார்பாக உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இம் மலரை ஆய்வு செய்த **திருமதி சோபா ஜெயரஞ்சித்** இம் மலர் சிறப்புற வெளிவர அனைத்து வழிகளிலும் நல்லுதவிகளை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நன்றி**

***திருமதி .ப. சின்னத்தம்பி – இணை இதழாசிரியர்***

# கஜானந்த் அச்சகம்



(Book சொப் & ஸ்டூடியோ)

சகல விதமான அச்சக வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் விபுலானந்தர் வீதி, வாழைச்சேனையில் அமைந்துள்ள கஜானந்த் அச்சகம்

**ஒப்செட் பிரின்டிங்**
- திருமண அழைப்பிதழ்
- ஆலய உற்சவ பிரசுரம்
- கடிதத் தலைகள்
- பற்றுச்சீட்டு புத்தகம்
- சான்றிதழ்கள்
- விசிடிங் காட்
- துண்டுப் பிரசுரங்கள்

**டிஜிட்டல் பிரின்டிங்**
- வெனர் பிரின்டிங்
- ஸ்டிக்கர் பிரின்டிங்
- ID காட் பிரின்டிங்
- Mug பிரின்டிங்

ஸ்கிறீன் பிரின்டிங்
கலர் பிரின்டிங்
போட்டோ எடிட்டிங்
போட்டோ பிறேமிங்
டைப் செட்டிங்
Book வைன்டிங்
கிராபிக்ஸ் டிசைனிங்
றப்பர் ஸ்டம் மேக்கிங்





சகல விதமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் புகைப்படப் பிடிப்பு, புகைப்பட வேலைகளையும் இங்கே பெற்றுக்கொள்ள முடியும்.

விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை.
077-691-5080, 075-2263340

# WIN DIGITAL PRINTING

## MAIN STREET, VALAICHENAI

## TEL : 0652258375





வின் அச்சகம் வாழைச்சேனை - 0652258375